போஸ்டு ரி. நெ. 819.

உ

கடவுள் துணை.

விவேகபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி ௫. } விரோதிகிருது வருடம் மார்கழி மீ { பகுதி ௯.

பொருளடக்கம்.

காலஞ்சென்ற வே. கிருஷ்ணசாமி ஐயர்—பத்திராதிபர்		௨௬௧
ஸ்ரீ அம்பலவாணதேசிக புத்தகசாலை நாகைத் தமிழ்ச்சங்கத்தின் வருஷபூர்த்திக் கொண்டாட்டம்	ம. கோபாலகிருஷ்ணையர்	௨௭௦
தமிழ்க்கல்வி—பழ. காசி.		௨௭௭
சைவம் நாட்டிய தமிழ் மாது—ஐ. சாமிநாதமுதலியார்		௨௭௮
மலேரியா என்னும் விஷஜுரம்—சர்க்கார் பிரசுரம்		௨௮௨
மாலினி மாதவம்—R. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A. B. L.		௨௮௫
பஞ்சபூதம்—C. S. முத்துசாமி ஐயர்		௨௯௧
நாட்டுக்கோட்டையாரும் தலைமயிர்வளர்த்தலும்	M. சின்னையாசெட்டியார்	௨௯௪
முத்ரா ராக்ஷஸம்—R. வேதநாராயண சர்மா B. A. B. L.		௨௯௫
காலஞ்சென்ற ஆனரபிள் ஸ்ரீமத் M. வெங்கட்டராமையரவர்கள்	ம. கோபாலகிருஷ்ணையர்	௨௯௭
ஸர் ஐஸக் நியூடன்—S. நாராயணன் B. A., L. T.		௨௯௯
சமாசாரக்கொத்து—பத்திராதிபர்		௩௦௦

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபால கிருஷ்ணையர். }
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். } பத்திராதிபர்

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.
மாணாக்கர்கட்கு வருஷசந்தா ரூ 1. தபாற்கூலிவேறு. தனிப்பிரதி அணா 3.
மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.

வித்தியாபாநு விளம்பரம்.

இதை நினையுங்கள்.

உங்களுக்கு நவீனமும் நாகரீகமுமான நூதன பாரிஸ் கலர்களில்

அதாவது,

ரோஜா, கத்திரிப் பச்சை, நீலம். மேகவர்ணம், பவளம், வெளிர்ப்பச்சை, தாமிரம், ஆரஞ்சு.

இந்தக் கலர்களில்

ரவிக்கை குட்டைகளும், புடவைகளும்

தேவையாயிருந்தால் நீங்கள்

காசியிலுள்ள பட்டு வர்த்தகம்

கே. எஸ். முத்தையா அண்டு கம்பேனி

க்குத்தான் எழுதவேண்டும்.

ஏனெனில்,

நம்மவர்களுக்கு பஸந்தான பலவிதமான தினுசுகள் அவர்களிடத்தில்தான் ஜாஸ்தியாக இருக்கின்றன.

அநேக ஸ்திரீகள் தங்களுக்குத் தகுந்த ரவிக்கை தினுசுகளும் புடவை தினுசுகளும் கிடைப்பதைப்பற்றிக் குறிப்பாக இருக்கிறார்கள்.

இந்தக் கம்பெனியார் சப்ளைசெய்யும் தினுசுகள் வெளியூர் ஜனங்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுக்கமுடியும்.

இவர்களுக்கு வரும் வெளியூர் ஆர்டர்களை மிக கவனத்துடன் கவனித்து அனுப்புவதால வெளியூரார்களுக்குத் தகுந்த தினுசுகளை அனுப்பப்படுமென்பது திண்ணம்.

42 இஞ்சு அகலம் 8 கஜம் நீளம்	புடவை 1க்கு விலை ரூ. 25 முதல் ரூ. 50 வரை.
42 இஞ்சு அகலம் 20 இஞ்சு நீளம்	ரவிக்கை 1-க்கு விலை ரூ. 2—8—0 முதல் ரூ. 5 வரை

எங்கள் ஜெனரல் சேட்லாக் இனாமாக அனுப்புவோம் எமது சரியான விலாசத்தை மறந்துவிடாதிருக்க பிரார்த்திக்கின்றோம். (விலாசம்)

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

பட்டுப்பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீகாசி. Benares City.

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௫. } விரோதிகிருது ௵ மார்கழி ௴ { பகுதி ௯.

காலஞ்சென்ற ஆனரபிள் ஸ்ரீமத்
வே. கிருஷ்ணசாமி ஐயர், B.A., B.L., F.M.U., C.S.I.

1911 ௵ டிசம்பர் ௴ 28 ௳ வியாழக்கிழமை காலை 6 மணிக்கு ஆனரபிள் ஸ்ரீமத் வே. கிருஷ்ணசாமி ஐயர் காலஞ்சென்றதறிந்து அளவற்ற விசனமடைகின்றோம். இவரது அகால மரணத்திற்காக ஆங்கிலமறிந்த உலக முழுதும் துக்கிக்கின்றது. "வானமர் கடவுள் திருவருள் மலிந்த மனிதரிற் சிறந்த" வராகிய இப்புண்ணிய புருஷர் 1885 ௵ ஹைகோர்ட்டு வக்கீலாகித் தக்கநெறியில் மிக்க நிதி ஈட்டி அவற்றிற் பெரும்பாகத்தைத் தானதருமங்களில் செலவிட்டவர். புலவர்கட்கும் பொதுஜனர்கட்கும் நன்மை புரியவென்றே மிகக பொருள் வருவாயையும வெறுத்து ஹைகோர்ட் ஜட்ஜ்ஸ்தானத்தையும் கவுன்ஸில் மெம்பர்ஸ்தானத்தையும் வகித்து அவ்விருதிறத்தாருடைய நன்கு மதிப்பையும் பெற்றவர். தர்மரக்ஷணசபை. வேங்கடரமண வைத்தியசாலை, இந்தியன் பாங்க், சுதேசியநிதிக கைத்தொழிற் சங்கம், ஸம்ஸ்கிருத காலேஜ், ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன், ராணெடே புத்தகசாலை முதலியவற்றைப் பொருள்தந்து நிறுவினவர். ஆரிய ஆங்கில நிபுணர். டாக்டர் ஸர்எஸ் சுப்பிரமணியம் அவர்களிடம் தொழில் பயின்று, ஹைகோர்ட் வக்கீலாகி, அவர் வகித்த ஹைகோர்ட் ஜட்ஜ் வேலையையும், சர்வகலாசாலை, சட்டநிரூபண சபை இவைகளில் அவர் வகித்த ஸ்தானங்களையும் அடைந்து; அவரைப்போலவே சென்னைச் சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கு நல்லுபதேசம் (Convocation Address) செய்யும்தொழிலை ஏற்று, அவருடன் சேர்ந்து தர்மரக்ஷண சபை முதலியவற்றை நிறுவி, அவரும்வகிக்காத கவுன்ஸில்மெம்பர் ஸ்தானத்தையுற்று, அவர்க்கு மிக்க பெருமையையும் மட்டற்ற மகிழ்ச்சியையும் விளைவித்த இவரது பிரிவாற்றாது வருந்தும் ஷை மணி ஐயர் அவர்களுக்கும் ஏனையோர்கட்கும் ஈசன் ஆறுதல் புரிவாராக.

பத்திராதிபர்.

ஸ்ரீ அம்பலவாண தேசிக புத்தகசாலை,

நாகைத்தமிழ்ச் சங்கத்தின் வருஷபூர்த்திக் கொண்டாட்டம்.

1912வரு ஜனவரிமீ 5உ மாலை 4 மணிக்கு நாகை தேவஸ்தான கமிட்டி ஆபிஸில் சபைகூடியது. நாகை முனிஸிபல் சேர்மேனும் ஐக்கோர்ட்டு வக்கீலும் ஆகிய ஸ்ரீமாந் ராய்பகதூர் கே. எஸ். வெங்கட்டராமய்யர் அவர்கள் முதலிய கனவான்கள் பலரும் வந்திருந்தனர். சுமார் 300 பேருக்குமேலிருக்கலாம். முதலில் திருக்கூட்டத்தாரது தேவார பாராயணம் இன்னிசையுடன் நடந்ததும், இத்தமிழ்ச்சங்கத்தின் ஸ்திர அக்கிராசனாதிபதியும், "நாகைநீலலோசனி" பத்திராதிபரும், வித்வானும் ஆகிய ஸ்ரீ. ஜி. சதாசிவப்பிள்ளையவர்கள் எழுந்து இவ்வருஷ பூர்த்திக்கொண்டாட்டச் சபையில் இன்று முதல் 3 நாளும் மதுரை "விவேகபாநு" பத்திராதிபர் ஸ்ரீ-மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனம் வகித்து நடத்தவேண்டுமெனப் பிரேரேபித்தனர். அவையிலுள்ளார் ஆமோதித்துக்கரகோஷம் செய்தனர். கவிராயரவர்கள் அக்கிராசனத்தமர்ந்தவுடன் ஜி. சதாசிவப்பிள்ளையவர்கள் அக்கிராசனருக்கு வந்தனோபசாரப்பத்திரம் படித்து மாலைசூட்டி உபசரித்தனர். அக்கிராசனர் எழுந்து "இங்கு இத்தலைமை வகிக்கத்தமக்கு ஆற்றலில்லையாயினும் சபையார் விருப்பத்தை மறுக்கமுடியாமையுடன் இச்சங்கமானது தமது குலகுருவாகிய திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் தற்போது குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் திருவருட் கல்வியங்கடலாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகசுவாமிகளின் திவ்யதிருநாமத்தால் ஸ்தாபிக்கப்பெற்ற புத்தகசாலையுடன் தோன்றி நடைபெறுதலால், தாம் இத்தலைமை வகித்து நடத்தல் குருபணிவிடையாகவுமிருத்தல் பற்றியே இதற்கு இணங்கியதாகவும் மற்றும்பல பொருத்தங்களையும் சபைமகிழக்கூறி, இது தமிழ்ச்சங்கமாதலின் கல்வியின் அவசியத்தையும், தமிழின் பெருமையையும், சங்கம் கூடுதலால்வரும் நன்மைகளையும், சங்கத்தார் கடமைகளையும், கற்றலின்பயன் மெய்யுணர்தலே யென்பதையும், யாவரும் வியக்குமாறு முன்னுரையாக உபந்யசித்தனர். பின் சபைக்காரியதரிசியும், வித்வானும், நற்குண சீலரும் ஆகிய ஸ்ரீ. முத்துசாமி ஐயர் அவர்கள் அறிக்கைப்பத்திரம் படித்தனர். பின்னர், தூத்துக்குடி சைவப்பிரசாரகர் ஸ்ரீ டோ. மு. முத்தையபிள்ளை அவர்கள் முத்திநெறி என்னும் விஷயத்தைப்பற்றி,

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே"

என்ற, பாசுரத்தையே பீடிகையாகக்கொண்டு "ஆன்மாக்கள் அடையவேண்டியனவும் அடையக்கூடியனவும் அறம்பொருளின்பம் வீடு என்னும் நான்குமேயெனவும், இவற்றுள் வீடே சிற

ந்ததென்றும், இதனை யடையக்கூடிய வழியிதுவென விளக்குதலே இவ்வுபந்யாசத்தின் கருத்தென்றும், பழவினைகளாகிய பிராரத்த ஆகாமிய சஞ்சிதங்கள் விடுதலையுண்டாகவே புதுவினைகளாகிய சரியை கிரியையாதிகளால் அது வருமென்றும், இப்பழவினைநாசமும் குருலிங்கசங்கம வழிபாடுகளாகிய பத்திநெறியால் வருமென்றும், ஆகலின் பத்திநெறியைப் பற்றிச் சென்று முத்திநெறியையடைய வேண்டும் என்றும் சுருங்கச்சொல்லி விளங்கவைத்துச் சபையோர்க்குப் பெருமகிழ் வூட்டினர். பின்னர், மேற்கூறிய சங்கக்காரியதரிசியவர்களாகிய வித்துவான் ஸ்ரீ முத்துசாமி ஐயரவர்கள் தமிழ்ப்பெருமை என்னும் விஷயத்தைத் தொடங்கித் தமிழ் பரமபதியாகிய சிவபிரானால் தோற்றுவிக்கப் பெற்றதும், அகஸ்தியரால் வளர்க்கப்பெற்றதும், மூவேந்தராதிய பலவரசர்களால் பரிபாலிக்கப்பெற்றதும், ஆரியத்தோடொற்றுமை யுடைமையும், இனிமைப்பொருளுடைமையும், மற்றும் பல்வகைச்சிறப்புக்களையுடைமையும், இனி தெடுத்து விளக்கி அரியபெரிய மேற்கோள்களுடன் பொருள் விரித்துரைத்துச் சபையைக் குதூகலிப்பித்தனர்.

பின்னர் திருமுல்லைவாயில் வித்துவான் ஸ்ரீ. கதிர்வேற்பிள்ளை அவர்கள் சமயாபிமானம் என்னும் விஷயத்தைத் தொடங்கி உலகில் ஆன்மாக்களின் பக்குவங்கட்கேற்பச் சமயங்கள்பலவாக வுள்ளன வென்பதும், ஆயினும் எல்லாம் முடிவில் ஒருபொருளை யடையச்செய்யும் சோபானங்களே யென்பதும், ஒவ்வொருவரும் தம்மதத்தையுயர்த்திக்கொள்ளலாமன்றிப் பிறமதங்களைத் தூஷிக்கக்கூடாதென்பதும், சமயக்கிரியையை விடலாகாதென்பதும், ஒவ்வொருவரும் தத்தம் சமயத்தில் அபிமானம்வைத்தல் மிகவும் அவசியமே யென்பதும் தக்க மேற்கோள்களுடன் எடுத்துக் கூறினார்கள்.

பின்னர் அக்கிராசனர் எழுந்து அறிக்கைப்பத்திரத்தில் தோன்றும் வருங்கால விசேடக் குறிப்புகளாகவுள்ள சுப சூசகங்களையும், முத்திநெறி, தமிழ், சமயாபிமானம் என்ற ௩ பிரசங்கங்களிலுமுள்ள கருப்பங்களையும், வேறு வேறு உதாரணங்களால் எடுத்து விளக்கி முடித்ததுடன், தென்னாட்டிலிருந்து தென்மொழியையும், வடநாட்டிலிருந்து வடமொழியையும் பரிபாலித்து, சரஸ்வதிதேவியின் இருவிழிபோன்று விளங்கிப் புகழ்பூண்ட மதுரைத்தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைஸாமித்தேவரவர்களும், சென்னை கவர்னர் அவர்கள் கௌன்ஸில் மெம்பராகிய பிரும்ம ஸ்ரீ வே. கிருஷ்ணசாமியய்யர் அவர்களும் தங்கள் தங்கள் புகழுடம்பை நிலைநிறுத்திப் பூத உடம்பை நீத்தது நம்மவர்க்குப் பெரியதோர் நஷ்டமாக நேர்ந்ததென்று அவ்விருவர் பெருமையையும் எடுத்துக் கூறி நன்றி பாராட்டி முடித்தார்கள்.

பின்னர் ராயபகதூர் கே. எஸ். வெங்கட்டராமய்யரவர்கள் பிரசங்கிகளைப்பற்றியும் சபாநாயகரைப் பற்றியும் சபையைப்பற்றியு

புகழ்ந்து பேசினார்கள். முடிவில் ஸ்ரீ. சதாசிவம்பிள்ளையவர்கள் அக்கிராசனர், பிரசங்கிகள், சபையோர், யாவர்க்கும் வந்தனோபசாரங்கூறி சந்தனதாம்பூல புஷ்பச் செண்டு கற்கண்டுகள் கொடுத்தார்கள். இடையிடையே திருக்கூட்டத்தார் தேவாரப் பாசுரங்களை இனிமையாகப் பண்ணுடன் ஓதிப் பக்தியை விளைவித்தார்கள். இம்மட்டில் முதல்நாள் சபைமிக்க சந்தோஷத்துடன் நிறைவேறியது.

௨-ட மாலை 3 மணிக்கு மறுபடி சபை கூடியது. திருக்கூட்டத்தார் தேவார பாராயணம் நன்கு நடந்ததும சபையார் விருப்பின்படி மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனத் தமாந்தனர். சோழநாட்டில் பிரசித்திபெற்ற பிரபுவாகிய கண்ணிர்க்குன்றம் உடையாரவர்களின் பிரதிநிதியும், சுதேசமித்திரன் ஸ்டாண்டர்டு நிருபரும் நற்குணசீலருமாகிய ஸ்ரீ ராமையர் அவர்கள் புருஷார்த்தம் என்ற விஷயத்தை உபந்யசிக்கத்தொடங்கி மனிதப்பிறவியினுயர்வையும், பரம்பொருளுண்டென்பதையும், அதையடையவேண்டிய முறையையும், கர்மம், பகுதி, ஞானம என்பவற்றையும், தன்னையுமறந்து பக்திசெலுத்தவேண்டுமென்பதையும், மனசுசுத்திமேயசிறந்ததென்பதையும் விரித்து வெகு இனிமையாகப் பேசினார்கள்.

பின்னர் நாகை நாஷனல் ஐஸ்கூல் சம்ஸ்கிருத பண்டிதரும் பல பாஷா விற்பன்னரும், தமிழ்வித்வ சிகாமணியாகிய பிரமஸ்ரீ மஹா மகோபாத்தியாயர் வே. சாமிநாதய்யரவர்களின் சம்பந்தியும் ஆகிய ஸ்ரீமத். சக்கரபாணிஐயர் அவர்கள் கவிமணிகளின் பிரபாவம் எனத் தொடங்கி பல பாஷைகளிலும் சிறந்து விளங்கிய பல பண்டிதமணிகளின் பெருமையையும், அவர்கள் செய்த நூல்களின் பெருமையையும், தமிழ் வடமொழி ஆங்கிலம் இந்தி முதலிய பற்பல பாஷைகளில் உதாரணக் கவிகளுடன் நன்றாகப் பேசினார்கள்.

பின்னர் ஸ்ரீமார் ஆட்கொண்டார்பிள்ளை அவர்கள் சங்கத்தால் எய்தும் நன்மை எனத்தொடங்கி பழைய முச்சங்கப் பெருமை, நான்காம் தமிழ்ச்சங்க மாண்பு, நாகைத் தமிழ்ச்சங்கத்தின் ஆக்கம், அதன் அவசியம் முதலிய நல்விஷயங்கள் பலவற்றையும் யாவரும் கொண்டாடுமாறு பேசினார்கள்.

பின்னர் தஞ்சை ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரும் வித்துவானும் ஆகிய ஸ்ரீமார் ஐ. சாமிநாத முதலியார் அவர்கள் மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னரவர்கள் விபவம் எனத்தொடங்கி ஆறு அதிகாரமாகப் பிரித்து நமது காருண்ய மாதாவாகிய ஸ்ரீமதி விக்டோரியா மகாராணியவர்கள் பெருமையையும், அவ்வம்மையாரின் தவப்புதல்வர்கள் பெருமைகளையும், மாட்சி தங்கிய எழாவது எட்வர்ட் மஹாராஜா அவர்கள் மகாராணி அலெக்சாண்ட்ரா அம்மையாரவர்கள் பெருமைகளையும், தறபோது நம்மையாளும் உதாரகுணை தருசீல மேதாவியாகிய கனம் ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்

த்தி மஹாராஜா அவர்கள், மகாராணி மேரி அம்மையார் இவர்களுடைய பெருங் கீர்த்தியையும், இங்கு ஆங்கில அரசாட்சியால் நாமடைந்த மிகப் பெரிய நன்மைகளையும், பாராட்டி வசனமாகவும் இடையிடையே செய்யுளாகவும் சபையார் யாவரும் 'பேஷ் பேஷ்' என்று கரகோஷஞ்செய்து சந்தோஷிக்குமாறு பேசினார்கள். பின்னர் நாகை நீலலோசனிப் பத்திராதிபர் ஸ்ரீ ஜி. சதாசிவப்பிள்ளையவர்களியற்றிய இராஜ வாழ்த்துக்கவிகளை இரண்டு மாணாக்கர்கள் இன்னிசையோடு சபையார் உள்ளமுருகப் பாடினார்கள்.

பின்னர் ஸ்ரீ. பொ. மு. முத்தையபிள்ளை அவர்கள் அறம் என்னும் விஷயத்தை யுபந்நியசிக்கத்தொடங்கி "ஆன்மாக்களெல்லாம் இன்பத்தையே விரும்பும். அவ்வின்பம் இம்மை மறுமை வீடு என மூதிறப்படும் அவை ஆன்மாக்கள் விரும்பியவாறே கிடையாமையால் அவற்றிற்கு வேறு காரண மிருக்கவேண்டும். அக்காரணமே அறமாவது. அது பதியறம், பசுவறம், பாசவறம் என மூவகைப் படும். இவை முறையே சிரார்த்தம், நீர்ப்பந்தல் குருலிங்க சங்கம பூசை முதலியனவாம. இவையும் கால இடவகைகளால் பயன்படுவனவாம். பாவத்தைச் செய்யாமையும அறமாம். புண்ணியத்தைச் செய்யாமையும் பாவமாம். ஆயினும் புண்ணியத்தை இயன்றளவு செய்யலாம் பாவத்தையோ முற்று நீக்கவேண்டும். பின்னைச் செய்வாமென்னாது அறத்தை யிப்பொழுதே செய்யவேண்டும். அறப்பயனைச் சிவிகை பொறுத்தானோடூர்ந்தானிடை யறியலாம் ஆதலின் ஒவ்வொருவரும் அறஞ்செய்ய முற்படவேண்டும" என முறையே கூறி அறன்வலி யுறுத்தல்" என்னும திருக்குறட் பாசுரங்களின் முறை வைப்பையும விளக்கிச் சபையார் பெரிதும மகிழ்ந்து கொண்டாடப் பேசினர். பின்பு அக்கிராசனர் எழுந்து ஒவ்வொரு பிரசங்கிகளின் கல்வித்திறமையையும் அவரவா உபந்யாசங்களின் சிறப்பையும் ஆங்காங்கு பற்பல விசேடங்களோடு பாராட்டிப் பேசினர். தேவார பாராயணத்துடன் சபை அன்று நிறைவேறியது.

7-ம் தேதி மாலை 2-30க்கு மூன்றாம்நாட் சபை கூடியது. திருவாரூர்ஜில்லாக் தமிழ்ப்பண்டிதராகிய வித்துவான் பிரும்மஸ்ரீ சந்தானமய்யங்கார் அவர்களின் தேவார பாராயணம் நடந்தும சபையார் விருப்பப்படி ஸ்ரீ. மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களே அக்கிராசனத் தமர்ந்தனர். பிரசங்கசாகர வித்வான் பிரும்மஸ்ரீ ராகவாசாரியார் அவர்கள் திரிமதம் என்னும் விஷயத்தைத் தொடங்கி மத்வ வைஷ்ணவ சைவமதங்களின் கொள்கைகளையும, அந்தந்த மதஸ்தாபனாசாரியர்களின கருத்துக்களையும், அவற்றின் தத்வ பேதங்களையும் சபை மகிழ விரித்துரைத்தனர். பின்னர் லோகோ ஆபீஸ் எட்டினர்க்கு, பிரும்மஸ்ரீ நடேசையர் அவர்கள் இறைவன் வழிபாடு என்னும விஷயத்தைத் தொடங்கி கடவுளின் கருணையையும், கடவுளை வழிபடவேண்டிய முறைகளையும, பாசமுற்றலன்றி அவ்வழிபாடு

முற்றுமென்பதையும், சரியை கிரியை யோக ஞானங்களையும் பற்பல ஆப்த வாக்கியப் பிரமாணங்களுடன் நன்கு எடுத்துக் கூறினார்கள். பின்னர் செல்வப்பேறும் கல்வித்திறனும நட்புரிமையுங் கொண்ட ஸ்ரீமான் நாச்சியப்ப முதலியார் அவர்கள் திருமங்கைமன்னன் பிராபாவம் என்னும் விஷயத்தை யுபந்யசிக்கத் தொடங்கி சாரங்காவதாரமாக நீலனென்னும் பாலப் பெயருடன் கள்ளர்சாதியிற் பிறந்து திருமாலுக்கடிமை செய்து ததியாராதனம் செய்து வறுமையுற்றபோதும் திருடியாவது ததியாராதனத்தை நிறைவேற்றி விஷ்ணுபக்த சிகாமணியாகிய திருமங்கையாழ்வார், பிறப்பிலிருந்து அவர் செய்த அற்புதங்களை யெல்லாம் எடுத்தோதி, அப்பெருமான் திருப்பாடல் பெற்றது இந்நாகை நகராதலின் நாம் அவர்சரிதத்தைக்கூறி வாழ்த்தல் தக்கதே யென்று சிறந்த பல கவிகளையும் கூறிச் சபையை யுவப்பித்தார்கள் பின்னர் கிராமமுன்சீபும், கல்வி வல்லுநரும் ஆகிய ஸ்ரீ. சண்முகசுந்தர முதலியார் அவர்கள மெய்கண்ட தேவரும் சிவஞான போதமும் என்றெடுதது உபந்யசிக்கததொடங்கி, அறிவு பொறி வழிப்படுவதும், பாவனைவழிப்படுவதும் என இருவகைப்படுதலையும், பிறநூல்களைப்பயிறலும் ஞானசாத்திரங்களையறிதற்குக் கருவிகளாகக்கொண்டு இறைவனையறியவே என்பதையும், ஸ்ரீ பரஞ்சோதி முனிவர் வந்து மெய்கண்டதேவருக்கு உபதேசித்தல, சகலாகம பண்டிதருக்கு மெய்கண்ட தேவ ருபதேசித்தல் முதலிய அற்புத சரிதங்களையும், சிவஞான போதம் வடமொழியிலிருந்து மொழி பெயர்ப்பன்று தமிழிலேயே முதலிற்றோன்றிய தென்பதையும, மற்றும் அந்நூலின் பெருமைகளையும் வெகு இனிய குரலுடன் அழகுறப் பேசினார்கள்.

பின்னர் நாகை முன்ஸிபல் சேர்மேனும் ஐக்கோர்ட்டு வக்கீலும் ஆகிய ப்ரும்மஸ்ரீ ராயபகதூர் கே. எஸ். வெங்கட்டராமையர் அவர்கள் தமிழ் வளர்ச்சி'' என்னும் விஷயத்தை யுபந்யசிக்கத்தொடங்கி தமிழ்ப்பாஷையின் பெருமை பழமைகளையும், பாஷை நடையை இக்காலத்துக் கேற்பச் சற்று இலகுவாக்க வேண்டுமென்பதையும், அப்படியாயின் இன்னும் மிக அபிவிருத்திக் கேதுவா மென்பதையும், இதுவே இததகைய சங்கத்தார்செய்ய வேண்டிய கடமையென்பதையும், நமது காருண்ய மிகக பிரிட்டிஷ் கவர்ன்மென்டார் நம பாஷையைப் பரிபாலிக்க முன்வந்துள்ளா ரென்பதையும் சபையோர் யாவரு மகிழ்ந்து கரகோஷஞ் செய்யக் கூறினார்.

பின்னர் ஆலங்காடு வித்துவான் சிதம்பரச் செட்டியாரவர்கள் ஞானம் என்னும விஷயத்தை யுபந்யசிக்கத் தொடங்கி சரியை முதலிய நான்கையும், சாலோக முதலிய நான்கையும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்பவற்றையும், அநுபவஞானம, சாத்திர ஞானம், பாசஞானம, பசுஞானம், பதிஞானம் எனபவற்

றையும், கனவு நனவற்ற நிலையின் பெருமையையும் பல உதாரண கவிகளுடன் தெளிவாகப் பேசினார்கள்.

பின்னர் ஸ்ரீமத். பொ. மு. முத்தையபிள்ளை அவர்கள் குருவழிபாடு என்னும் விஷயத்தை யுபந்யசிக்கத்தொடங்கி "குருவழிபாடு" என்பது குரு + வழிபாடு என்னும் இருமொழிகள் சேர்ந்த ஒரு தொடர்மொழி. முன்னது வடமொழியும் பின்னது தென்மொழியுமாம் இவ்விரு மொழிகளும தமிழ்நாட்டாருக்குரியனவாகும். இன்றேல் மந்திர சாத்திரங்களெல்லாம இவர்கட்குரியனவல்ல வெனறுகும் மந்திர சாத்திரங்களும் முன்னிருந்து பின்னிறந்து விட்டன வென்பது பொருந்தாது. ஆரியர்கள் இநாட்டுக்கு வருமுன்னரே அம்மொழி மந்திரத்தின்பொருட்டு இறைவனால் நமக்குத் தரப்பட்டது. இது பற்றியே "ஆரியமுந் தமிழும் ஆனாய்" என்று தமிழ் வேதங்கள் முழங்கின குருவழிபாடு என்பதில் முன்மொழியானது வடமொழி விதிப்படி கு + ரு எனப்பகுக்கப்படும் கு-இருள். ரு-கெடுத்தல். ஆகவே இருளைக்கெடுத்தல் காரணமாக ஆசிரியர்க்கு அப்பெயர்வந்தது. இருளைக்கெடுக்கும் ஒளி பலவகைப்படும். அவற்றுள் சூரியவொளியே மேலானது. ஒளிகள் பலவாதற்கேற்ப இருட்கேடும் பலவகைப்படும். இவைபோலவே குருவும் பலதிறப்படுவர். அவரால் உண்டாம் மலநீக்கமும் பலதிறப்படும. தொகுத்துக் கூறுமிடத்து குரு, வித்தியா குரு, சமய குரு என இருதிறப்படுவர். வித்தியாகுரு பலவேறு வகைப்பட்டு, நெடுங்கணக்குமுதல் ஞானசாஸ்திர மீறுகப் போதிப்பவர் அவரைக்கொண்டே ஞானசித்திபெறுதல அமையாது. அது சமய குருவாலன்றி ஆகாது சமய குருவும், கிரியாகுரு, ஞானகுரு, என இருவகைப்படுவர். கிரியாகுருவையடுத்து அவருபதேச வழியிலநின்று கிரியாநுட்டானங்களைச சரியாகச செய்யவேண்டும. அவ்வாறே ஞானநுஷ்டானம ஞான குருவினயாற் பெறவேண்டும். ஞானகுருவை தீயில் நெருப்புப்பற்றியவன் நீரை நாடிப்பெறுவது போல் நாடிப்பெறவேண்டும். ஞானகுருவும் சமயகுரு சந்தானகுரு என இருவகைப்படுவர். வேண்டுஞ் சமயத்தில் தோன்றி புறச்சமயத்தை வென்று தம சமயத்தை நாட்டுவதால் சமயகுரு வெனப்படுவர். இவர் திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய நால்வராவார் இவருட் சுந்தரமூர்த்திசுவாமிகள் உட்பகையாகிய காமநோயை வென்று சமய வுண்மையை ஸ்தாபித்தமையால் அவர் இவ்வகையிற் சேர்க்கப்பெற்றனர். சந்தானகுரு ஒருவர் பின ஒருவராய் உபதேசிக்கப் பெற்று வருபவர்கள். அவர் மெய்கண்டதேவர் முதலிய நால்வர். அப்பரம்பரையே திருவாவடுதுறை ஆதீனம். சமயகுரவரும் சந்தானகுரவரும் திருவருட்டோனறல்களே. இவர்களால் ஞானதீக்ஷை பெற்றவன் தேகமுள்ளளவும் ஆசிரிய வழிபாடு செய்யவேண்டும். அவ்வழிபாடு அனுகூலமாக நடத்தல், குற்றேவல்புரிதல், திருமேனியைப்பேணல், சிவமெனப்பாவித்தல, என நான்கு திறப்படும. இவ்வனம் வழிபாடு புரிந்தால் அநுபவம் நிலைத்துப் பேரின்பஞ்

சேர்தல் ஒருதலையேயாம்." என யாவரும் பெருமகிழ்ச்சிகொள்ளும் படி பிரசங்கித்தனர்.

பின்னர் இச்சங்கத்தை ஆசிர்வதித்து திருவாவடுதுறை ஆதினத்து மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் விடுத்தருளிய தந்தியையும், சென்னை பிரஸிடென்ஸிக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்கள் கடிதத்தையும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து நூற் பரிசோதகர் ஸ்ரீமத் மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் விடுத்த செய்யுட்களையும், மற்றும் சில வித்துவான்கள் விடுத்த கவிகளையுஞ் சங்கக் காரியதரிசி ஸ்ரீமத் முத்துசாமி ஐயரவர்கள் வாசித்தார்கள்.

பின்னர் அக்கிராசனர் எழுந்து ஒவ்வொரு உபந்யாசங்களி லுள்ள விசேஷங்களையும் எடுத்துக்கூறி சந்தர்ப்பத்துக்கேற்ற பற் பல மேற்கோள்களையும் காட்டிப் பாராட்டியதுடன் சிவஞான போதம் வடமொழியில் ரௌரவாகமத்திலிருந்தெடுத்த மொழி பெயர்ப்பென்பது திராவிடமாபாடிய கர்த்தாவாகிய ஸ்ரீமத் மாதவச் சிவஞானயோகிகள் கருத்தென்பது பாயிரவுரையாலும் 6, 11ம் சூத்திரவுரையாலும் விளங்குவதால் அதுவே தமக்குங் கருத்தாம் என்றும், தமிழ் நூல்களே முதலிற் றோன்றியதாயின் தமிழ்மொழியாற் பெயர்பெற்று சிவஞானபோதம் என மும்மொழியும் வடமொழியாலமைந்ததென்றும், வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றதென்பதாற் குறைபாடு சிறிதுமில்லையெனவும் எடுத்துக் கூறினார்கள். இக்கொண்டாட்டம், தொடக்கத்தில முத்திநெறி யென்ற உபந்யாசமும், இறுதியில் குருவழிபாடு என்ற உபந்யாசமும் அமைந்தமையால், குருவழிபாடே முத்திக்கு வழியாமென்பதை அறிவுறுத்துவதாமெனவும், ஸ்ரீ அம்பலவாணதேசிக புத்தகசாலையுடன்கூடிய இச்சங்கத்தில் குருவழிபாடு என்ற உபந்யாசம் மிகப்பொருத்தமுடையதெனவும் நயம்படப்பேசினார்கள். சபையோர் விரும்பப் படி கம்பராமாயணத்தில் ஒரு கவியைச் சொல்லிப் பொருள் விரித்துரைத்ததுடன் சங்கவாழ்த்தாக

திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும்வீடுந் தெளியச் செய்யும்,
இருவடிவப் பாரதிமா ளுறைநாகைத் தமிழ்ச்சங்க மென்றும் வாழ்க,
அரியகவி புகல்சுந்தர சிவழந்து சாமியெனும் அணிநூல் வாணர்,
பெருகுங்கா வாணர்கவி வாணர்கள் அம்பலவாணர் பெருமை வாழ்க.

என்ற கவியையும் கூறி முடித்தார்கள். சங்கத்தின் காரிய தரிசியவர்களும் அக்கிராசனரவர்களும் எல்லார்க்கும் வாழ்த்தும் வந்தனமுங்கூறிச் சந்தன புஷ்பமாதியுதவினர். இடையிடையே தேவார பாராயணம் நடந்தது, இவ்வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நாகைத் தமிழ்ச்சங்க வருஷோத்ஸவம் சிறப்பாக நிறைவேறியது.

இங்ஙனம்,

ப. கோபாலகிருஷ்ணையர்.

உ

திருச்சிற்றம்பலம்.

தமிழ்க் கல்வி.

"தமிழ்க்கல்வி" என்பது "தமிழ் மக்கட்குரிய கல்வி" எனவும், "இனிமையாகிய கல்வி" எனவும் பொருள்படுவதோர் தொடர்மொழி. விரும்பியவற்றை யெல்லாம் தன்னையடைந்தவர்க்குப் பாலிக்குந் திறம் இக்கல்வியிடத்தே பெரிதும் அமைந்துள்ளதென்பதற்கு

"முத்தெறியும் பெண்ணை முதுநீரது தவிர்ந்து
தத்திவரும் நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் வீகன் றிருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா."

என்று ஔவைப் பிராட்டியார் நீர் பெருகிவரும் பெண்ணையாற்றைப் பார்த்துத் திருவாய்மலர்ந்தருள, அங்ஙனமே அது பெருகி வந்தது என்னும் இஃதொன்றே யமையும். அன்றியும், எல்லாரானும் தீங்காக உணரப்படும் தீமையை ஒழித்து, நலமாக உணரப்படும் நன்மையை யெல்லாம் தந்து, நம்மை ஈசன் றிருவருட்கு ஆளாகச் செய்வதும் இத்தமிழ்க் கல்வியே. ஏனெனில் தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களை ஓதி உணர்தற்கு இத்தமிழ்க் கல்வி அவசியம் வேண்டப்படுவ தொன்றாதலான் என்க. இது நிற்க.

இத்தமிழின் உற்பத்தி முறையைச் சற்றாராய்வோம்: இது சிவபெருமானாலும் முருகக் கடவுளாலும் அகத்திய முனிவர்க்கு உபதேசிக்கப்பெற, அவர் தொல்காப்பியர், அதங் கோட்டாசான் முதலிய பன்னிரு மாணாக்கர்க்கு உபதேசிக்க, அவர்களும் தம்மையடைந்த மாணவர்கட்கு உபதேசிக்க, இவ்வாறே உலகமெங்கும் பரவியது. இத்தகைய தமிழணங்கு பாண்டிய அரசர்களால் நிறுவப்பெற்ற முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூச்சங்கங்களினும் ஒரு குறைவுமின்றி ஆனந்தமாய் இருந்து, நின்று, தவழ்ந்து, வளர்ந்துவரலாயினள்.

இத்தமிழ்மொழியின் இனிமைகருதியே முதற்சங்கத்திருந்து தமிழாராய்ந்தார், இறையனார், குமரவேள, அகத்தியமுனிவர்முதலாகிய ஐந்நூற்று நாற்பத தொன்பதின்மர், இடைச்சஙகத்திருந்து தமிழாராய்ந்தார் அகத்தியர் தொல்காப்பியர் முதலிய ஐம்பததொன பதின்மர், கடைச்சஙகத்திருந்து தமிழாராய்ந்தார, சரஸ்வதியம்மையின் திருவவதாரமாகிய நக்கீரர்முதலிய நாற்பத் தொன்பதின்மர்.

பரமசிவனும் சங்கத்தார்களுடன் கூடித் தமிழாராய்ந்தாரென்னும் பக்ஷத்தில், இத்தமிழ்க்கல்வியினும் உயர்ந்தது யாதோ? தமிழின் பெருமையைக் கூறவந்த நமது பரஞ்சோதி முனிவர்,

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
உண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச சொற்களோ சாற்றீர்."

எனத் திருவாய்மலர்ந் தருளியுள்ளார். இத்தகைய் தமிழ்க்கல்வியை முறையாக இலக்கண இலக்கியஙகளோடு கற்று அவ்வாறே நடந்து இருமைப்பயனையும் பெற்று நீடுவாழுமாறு எல்லாம் வல்ல இறைவர் அநுக்கிரகிப்பாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

பழ.. காசி.

சைவம நாட்டிய தமிழ் மாது.

(238-ம் பக்கத் தொடர்ச்சி.)

"கூன்இரும்பைத் தான்நிமிர்க்க கொல்லன்உலை வாட்டல் என
மீனவனை வாட்டியதால் வெஞ்சுரம்" அவ்வரசன் தாபஞ் சகியாதவனாய் "தேவியை யழையுங்கள்" என்றான்.

"அடித்தி இதோ இருக்கின்றேன்" என்று ரம்மையார்.

"சாகின்றேன் தாபஞ் சகியேன். என தாவி போகின்றதென்றான்" அரசன்.

"இங்கே கூடியிருக்கின்ற பெரியோர்கள் ஏதேதோ செய்கிறார்கள். சுரம் சிறிதும் அடங்கக காணேன். வேறு யாரையாவது கொண்டு பார்க்கலாமா?" என்றார் அம்மை.

"யார் பார்த்தால் என்ன? நோயகல வேண்டியது. வேறு யாரும் இருக்கிறார்களா?" என்றான் அரசன்.

"வடக்கினின்றும் ஓர் ஐயர் வந்திருக்கிறார். அவர் வந்து பார்த்தால் தீரும் என்று நினைக்கிறேன்" என்றார் அம்மை.

"அவரை அழைக்கத் தடையென்ன?" என்றான் அரசன்.

"தடை யொன்றும் இல்லை. வந்தால்——" என்று மயங்கினார் அம்மை.

"மயங்குவானேன்? வந்தால் கண்ட முட்டு" உண்டாகும் என்று சொல்லுகிறது தானே?" என்றார் சமணரிற் சிலர்.

"ஒருவர் பார்த்தால் ஊதி யெறியக்கூடிய இதை எண்ணாயிரம் பேர் இருந்து இதே முயற்சியாய்ப் பார்க்கையில் ஏன் பலபோகா? இன்னும் அரை நாழிகையில் சுத்தமாகும்" என்றார் பின்னுஞ் சிலர்.

"யாரானாலும் சரி. வியாதியைக் குணப்படுத்துவோர்க்கு என் உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒப்பிக்கொடுப்பேன்" என்றான் அரசன்.

சமணர்கள் எல்லாரும் கூடி என்ன செய்தும் சுரம் அடங்காதது கண்டு "இவர்களை நம்பவேண்டாம். ஐயரை அழைக்கலாம்" என்றான் அரசன்.

தேவியார் மந்திரியை நோக்கினார். மந்திரியார் ஓடி ஐயரை அரை நொடியில் அழைத்து வந்தார். ஐயர் வரக்கண்ட அமணர் மனங் கொதித்தவராய் ஏளனம் பண்ணத் தொடங்கினார்கள்:—

"இவர்தான் ஐயரோ?" என்றார் ஒருவர். "ஐயர் என்று உம்மை அழைத்தவர் யார்?" என்றார் மற்றொருவர். "உமக்கு எத்தனை வயதாயிற்று?" என்றார் சிலர். "இத்தனை வயதுக்குள் இத்தனை ஆடம்பரமேன்?" என்றார் வேறுசிலர்.

இது கண்ட அம்மை "வருமுன்னமே இத்தனை பாடு படுத்துகிறார்களே! இன்னும் என்னென்ன செய்வார்களோ! என்று வாய்வி

நிற்கக் கண்ட அடிகள், "இவர்களுக்கு யானஞ்சேன். யாதும் வருந்த வேண்டாம்" என்று தம் நகைக் குறியால் காட்டினர்.

சமணர் செய்த ஏளனத்தைக் கேட்ட அரசன், "எருதின்நோய் காக்கை யறியுமா? என்பது மெய்யாயிற்று. மூரண்படும் பாடென்ன? இதுதானா ஏளனஞ் செய்யச் சமையம்?" என்றான்.

"இவர் தந்திரமும் எம் மந்திரமும் இதோ பார்க்கலாம்" என்று சொல்லி "ஐயரே! குட்டையைக் குழப்பாதேயும். நீர் ஒரு பக்கம் நாம் ஒரு பக்கம் பார்த்துச் சுத்தப் படுத்துவோம். எந்த இடம் உமக்கு வேண்டும்?" என்றார்.

"இந்த இடம் அந்த இடம் என்று எமக்குக் குறிப்பிடவேண்டியதில்லை. உங்களுக்கு வேண்டுமானால் குறிப்பிட்டுக்கொள்ளுங்கள்" என்றார் ஐயர்.

"அப்படியா சரி. நம் முன் இருக்கிற இடம் நமக்கு" என்றார் அமணர் வலப்புறத்திலிருந்து.

"சரி யென்று விபூதிப் பையை எடுத்தார் ஐயர்."

"கூடாது கூடாது. அந்தச் சூதுப்பொடி கூடாது. அதைப் போட்டுச் சுத்தம் பண்ணினால் நாம் ஒப்போம்" என்றார்கள்.

"எதை ஒப்புவீர்?" என்றார் ஐயர்.

"அடுப்புச் சாம்பரால் தீரும்" என்றார் அமணர்.

ஐயர் கையை நீட்டினார். கொடுத்த சாம்பரை வாங்கி "மந்திரமாவது நீறு" என்று வலப் புறத்தில் தூவினார் ஐயர்.

"ஐயோ! கெடுத்தீரே. உமக்கென்று குறித்த இடத்தை உணர்ந்து கொள்ளாது கண்ட இடத்தில் தூவுகிறீரே. சிறு பிள்ளைத் தனத்தை வெளியிட்டீரே. உம்மை வைத்துக்கொண்டு எமக்கு என்ன காரியம் நடக்கும்? எமதிடம் பாழாச்சே" என்று மயிற்பீலியால், அதைத் துடைப்பதுபோல் துடைத்தார்கள். ஐயர் விபூதி விசேடத்தால் அது பட்ட இடம் சுத்தமாயிற்று.

"நமது பீலி பட்ட இடம் சுத்தமாயிற்று. மற்றப் புறத்தையும் சுத்தமாக்கி விடலாம். எல்லோரும் வாருங்கள்" என்று கூடி குண்டிகை நீரைத் தெளித்தார்கள். மயிற்பீலியாற் றுடைத்தார்கள். வாயோயாது மந்திரத்தைச் சொன்னார்கள். என்ன செய்தும் என்ன? சுரம் தீயாயிற்று. நீர் நெய்யாயிற்று. பீலி எரிவு (விறகு) ஆயிற்று. வாய் காற்றிழைக்கும் குழாய் ஆயிற்று. தாபம் சகிக்க முடியாதவனாய்த் "தேவி!" என்றான் அரசன்.

"தேவி வாராமற்றான் தாபம் அடங்க இல்லையோ?" என்றார் அமணர்.

"சுரம் ஒற்றை இரட்டையாயிற்றே!" என்றான் அரசன்.

"அதிகரிப்பதெல்லாம் நல்லது. இனி அடங்கிவிடும்" என்றார் அமணர்.

கேட்ட அரசன் கடுங்கோபங்கொண்டு "அதிகரிப்பதெல்லாம் அடங்குவதற்கா? ஆவியடங்கினால் தாபம் அடங்குமோ? சை! அப்பாலே போம்" என்றான்.

தேவி திகைத்து நின்றார். ஐயர் கையமைத்து, "அஞ்சவேண்டாம்" என்ற குறிப்புணர்த்திப் பூதியிற் பின்னும் ஒரு பிடி அள்ளி, மீதி பாகத்தில் போட்டுக் கையாற் றடவினார். ஐயர் கை படவே "ஐய"னருளால் நோயும் தணிந்தது. கூனும் நிமிர்ந்தது.

"கொற்றவன் றேவி யாருங் குலச்சிறை யாருந் தீங்கு
செற்றவர் செய்ய பாத தாமரை சென்னி சேர்த்துப்
பெற்றனம் பெருமை யின்று பிறந்தனம் பிறவா மேன்மை
உற்றனன் மன்ன னென்றே யுளங்களித் துவகை மிக்கார். (௧)

மீனவன் றன்மே லுள்ள வெப்பெலா முடனே மாற
ஆனபே ரின்ப மெய்தி யுசிமே லங்கை கூப்பி
மானமொன் றில்லார் முன்பு வன்பிணி நீக்க வந்த
ஞானசம் பந்தர் பாத நண்ணினா னுய்ந்தே னென்றான்." (௨)

(இன்னும் வரும்)

ஜி. சாமிநாத முதலியார்,
Ag. Sub Asst. Inspector of Schools, Tanjore.

மலேரியா என்னும் விஷ ஜுரம்.

சர்க்கார் பிரசுரம்.

(242-ம் பக்கத் தொடர்ச்சி.)

—(:o:)—

தெரிந்திருக்கிறவரையில் விஷஜுரம் பரவுவதற்குக் கொசுகே சாதனமாயிருக்கிறது. விஷஜுரம்விசேஷமாயிருக்கிற இடங்களிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதனால் விஷஜுரம் உண்டாகாதென்பது அடிக்கடி நடத்தப்பட்ட பரீக்ஷைகளால் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் கொசுகுகளில்லாதிருக்கும் பக்ஷத்தில் விஷஜுரமிராது; ஒருவன் தன்னை எப்போதும் கொசுகு கடிக்காமல் பாதுகாத்துக்கொள்ளக்கூடுமானால், அவனுக்கு விஷஜுரம் ஒருக்காலும் வராது. இக்காரணத்துக்காகவே விஷஜுரப்பிரதேசங்களிலே பிரயாணம் செய்யும் உத்தியோகஸ்தர்கள் கொசுகு வலைகளை உபயோகித்துத் தங்களுக்குக் கொசுகு கடி உண்டாகாமலிருக்கப் பிரயத்தனப்படுகிறார்கள்; ஆனால் அவர்கள் எப்போதுமே கொசுகுவலைகளுக்குள் இருக்கமுடியாதாகையால் சிற்சில சமயங்களில் அவர்களைக் கொசுகு கடிக்கவே கடித்து சிற்சில சமயங்களில் அவர்களுக்கு விஷஜுரம் காணவே காணுகிறது.

இதை மாற்றிச் சொல்லும்பக்ஷத்தில், மனிதர்களே இல்லாமலிருந்தால், கொசுகுகளுக்கு விஷஜுரத்தின் தொத்துவியாதி சம்பந்தமே உண்டாகாது; ஆகவே, ஜனசஞ்சாரமற்ற நெடுந்தூரத்துக் காட்டுப் பிரதேசங்களில அனோபிலேன் ஜாதிக்கொசுகுகள் நிரம்பியிருந்தபோதிலும், அவைகளில் ஒன்றுக்காவது தொத்துவியாதி சம்பந்தம் உண்டாகமுடியாதாகையால், எப்போதோ ஒருகால் அங்கே போகுமொருவனை அவை கடித்தாலும் அவனுக்கு விஷஜுரம் உண்டாகாது. விஷஜுரம் வராமல் தப்பித்துக்கொள்வதற்கான வழிகளுள் ஒன்றைத் தெரிந்துகொள்ள இதன் மூலமாய் நமக்கு நேராக ஒரு உபாயம் கிடைக்கிறது. விஷஜுரத்துக்குப் பேர்போன பிரதேசத்தில பிரயாணஞ் செய்கையில, சாத்தியப்பட்டால் கிராமத்திலாவது மனிதர் குடியிருக்குமிடத்திலாவது அவைகளின் சமீபத்திலாவது இராக்காலத்தில் முகாம் போடாமலாகிலும் தங்கா

மலாகிலும் இருக்கவேண்டும்; அவ்விடத்துக்கப்பால் அரைமைல் தூரத்தில் இருப்பது க்ஷேமமாகும். முகாமில் ஒருவருடன் கூட வரும் பரிவாரத்தில் ஒருவனுடைய ரதகத்தில் விஷஜ்வர கிருமிகள் ஏற்கனவே நிறைந்திருக்கக்கூடும். ஆனால் ஒரே இடத்தில ஒரு வாரத்துக்காவது அதற்கதிகமான காலத்துக்காவது தங்காமலிருக்கும்பட்சத்தில் அப்படிப்பட்ட சேவகனால் கூடக் கெடுதி உண்டாகாது; ஏனென்றால், அவனிடத்திலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெறுகிற கொசுகுகள் அவனைக் கடித்தபிறகு குறைந்தது ஏழுநாளாகிறவரையில் இன்னொருவனுக்கு அதைத் தொத்தவைக்க முடியாது; ஆகவே முகாம் அவ்வூரைவிட்டுக் கிளம்பும்போது, அவை பின்தங்கிப்போய்விடுகிற படியால் அவை ஒருவருக்கும் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பரவச்செய்கிறதில்லை. மனிதர் வசிக்கும் இடங்களுக்குச் சுற்றுப்புறங்களிலுள்ள தொத்துவியாதி சம்பந்தமுடைய பழைய கொசுகுகளே அபாயகரமானவை.

இப்போது தெரிந்திருக்கும்வரையில் விஷஜ்வரக் கிருமிகளை அழிக்கக்கூடிய மருந்து ஒன்றே. அது க்வினைன் என்று சொல்லப்படும் மருந்து. பிரதிதினமும் ஒரு தடவை இளங்கிருமிகள் அப்படி செலுத்தப்படும்போதே நசித்துப்போகிறபடியால் விஷஜ்வரம் விருத்தியாவது முற்றிலும தடைபட்டுப் போம். விஷஜ்வரம் வாஸ்தவமாய்க் காணும்போது, க்வினைனை அதிக அளவாக உட்கொண்டுவந்தால அது குணமாகும்; ஆனால அப்போது இரத்தத்திலிருக்கும கிருமிகளையெல்லாம அடியோடு அழித்துவிடுவதற்கு மூன்று மாதகாலம் தினந்தோறும க்வினைன் ஒரு தடவை உட்கொள்ளவேண்டிய அவசியமாகும். பெரியவர்கள் (எப்ஸம் ஸால்ட் என்னும்) மக்னீஷியம் ஸல்பேட் 1 ட்ராமுடன் க்வினைன் ஸல்பேட் சுமார் 10 க்ரெயின் சேர்த்து சாப்பிடவேண்டும்.

விஷஜ்வர பிரதேசத்திலுள்ள கிட்டத்தட்ட எல்லாக்குழந்தைகளின் இரத்தத்திலும் விஷஜ்வரக் கிருமிகள் இருக்கின்றன. இந்தக் கிருமிகளின் காரணமாக அக்குழந்தைகளில் பலருக்கும் ஜ்வரக் கட்டி உண்டாயிருக்கும். விஷஜ்வரம் கண்டிருக்கிற எல்லாக் குழந்தைகளுக்கும் ஜ்வரக்கட்டி உண்டாயிருக்கும் சகலர்களுக்கும் மூன்று

மாதகாலம் தினந்தோறும் க்வினேன் கொடுத்துவரவேண்டும். அப்படி செய்யும்பட்சத்தில் அவர்களுக்கு விஷஜுரம் பூர்த்தியாய்க் குணமாய்விடும்; ஆனால், அவர்களை மறுபடியும் கொசுகு கடிக்காமலும், மறுபடியும் தொத்துவியாதி சம்பந்தம் அவர்களுக்கு உண்டாகாமலும் அவர்களைக் காப்பதற்காக அவர்கள் வசிக்கும் இடத்தைச் சுற்றிலும் உள்ள எல்லாக் கொசுகுகளையும் அழித்துவிடுவதற்கான ஏற்பாடு செய்யவேண்டும்.

அடியிற்கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்:—

(1) விஷஜுரமானது தொத்துவியாதி சம்பந்தமுள்ள ஒருவனிடத்திலிருந்து தேகாரோக்கியத்துடனிருக்கு மொருவனுக்கு கொசுகினால் பரவுகிறதே யொழிய, தெரிந்தவரையிலும் வேறெந்த மூலமாகவும பரவுகிறதில்லை.

(2) ஆகையால், கொசுகுகளில்லாத பட்சத்திலும் அல்லது உங்களுக்கு கொசுககடி உண்டாகாமல் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய பட்சத்திலும், உங்களுக்கு விஷஜுரம் ஒருபோதும் வராது.

(3) கொசுகுகள் தண்ணீரிலேயே உற்பத்தியாகிறபடியால் தண்ணீர் இல்லாத இடத்தில், கொசுகுகளும் இரா, விஷஜுரமும் இராது.

(4) ஒரு ஜில்லாவிலுள்ள கொசுகுக ளெல்லாவற்றையும் அழிப்ப தவசியமில்லை; மனிதர் வசிக்கும் இடத்திலும் அதைச் சுற்றிலுமுள்ள கொசுகுகளே அபாயகரமானவை. வசிக்குமிடங்களைச் சுற்றிலும் கால் மைல் தூரம் வரையிலுள்ள பிரதேசத்தில் கொசுகுகள் உற்பத்தியாவதற் கேற்ற இடங்கள் இல்லாதிருக்கும் பட்சத்தில், கொசுகுகள் மிகவும் கொஞ்சமாயிருக்கும் அல்லது இருக்கவே இரா; விஷஜுரமும் இராது.

மாலினீ மாதவம்.

அத்தியாயம் 8.

தொடர் கதை.

—(:o:)—

தருமமே யுலகம் போற்றச் சகல்கா ரணமதாகும்;
தருமமே வழியா தென்றுந் தாபர மாகிநிற்கும்;
தருமமே தனைவேட் டோர்க்குச் சவுக்கிய மனைத்து நல்கும்;
தருமமே முத்திசேருஞ் சாதன மென்றுட் கொள்வான்.

—காசி ரகசியம்.

உலகத்தில் மனிதர்கள் ஸர்வஜாக்ரதையாய் இருக்குங் காலத்திலும் தற்செயலாய்த் திடீரென்று பலவாறு இடையூறுகள் நேரிடினும், அவ்வாபத்துக்களி னின்றும் தப்பிக்கும் வழி தெரியாது தியங்குங் காலத்தில் அதினின்றும் எதிர் பாராது தப்பித்து வெளியேறுவதும், இயற்கையாய்ப் பிரதிதினமும் ஸம்பவிப்பதைக் கண்டிருக்கின்றோம். அதன் காரணம் யாதென்று விசாரிக்கப் புகின், அவையெல்லாம் அபூர்வ ஸம்பவங்கள் (Strange coincidences) என்றும், அவைகளின் காரணங்களை விசாரித்தல் வீண் காலக்ஷேபம் (waste of time) என்றும் சிலர் அலக்ஷ்யம் செய்து விடுவார்கள். ஆனால், உலகத்தில் ஸம்பவிப்பன யாவும் காரண கார்ய விதி (Law of causation)க்குட்பட்டே நேரிடுகின்றன வென்றும், மத்திய காலங்களில் எவ்வாறு தோன்றிடினும் கடைசியில் தர்மத்துக்கு நன்மையும், அதர்மத்துக்குத் தீமையுமே பலனாக வாய்க்கின்றனவென்றும், சில தத்துவ சாஸ்திர நிபுணர்கள் கூறுவார்கள்.

மேற்கூறிய ஸித்தாந்தங்களின் உண்மை எவ்வாறிருப்பினும், ஒவ்வொரு மனிதனிடமும் அந்தர்யாமியாயுள்ள மனமும், மனதைச் சார்ந்த புத்தியும் அதியற்புதமான யந்திரங்களாயிருக்கின்றன; அவைகள் செய்யும் அற்புத வேலைகள், பார்க்கப் பார்க்க அதிசயத்தையும் ஆச்சர்யத்தையும் விளைவிக்கத் தக்கனவா யிருக்கின்றன! இனி இப் பாவிகளின் வசத்தினின்றும் தப்புவது எவ்விதமென்று தெரியாது மாலினி தவித்துக்கொண் டிருக்கும் நிலைமை

யில் "திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை" "தைவம் புருஷ காரேண" என்ற பழமொழிகள் மெய்யெனறு நிரூபிக்கவந்ததுபோல, மாதவனும் நமது பரதேசியும் அகஸ்மாத்தாய்த் திடீரென்று அந்தக் காட்டில், அம்மாலை வேளையில் தோன்றி, மாலினியைக் கொடியவர் வசத்தினின்றும் மீட்டதாய்ச் சொன்னோமல்லவா? அவர்கள் அவ்விடம் வந்துசேரவேண்டிய காரணத்தை யொருவாறு எடுத்துரைப்போம்:

பிரதிதினமும் போஜனமானதும், அரண்மனையில் இருப்புக்கொள்ளாது மாதவன் அவ்வரண்மனையைச் சார்ந்த பெரிய உத்யானவனத்தில் உலாவித் திரிந்து, தன் சோகத்தைச் சற்று மறந்து காலம் கழிப்பது வழக்கம்.

அன்று மாலையிலும் சுமார் 3 மணிக்கு, அவ்வாறே உலாவித் திரிந்துவிட்டுக் கடைசியாய், முந்திய ஜமீன்தாரின் ஞாபகச் சின்னமான கோவிலண்டை வந்து, ஆங்குள்ள பிம்பங்களைக் கண்ணுற்றுத் தாரை தாரையாய்க் கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தான். இதற்குமுன் அப்பிம்பங்களின் பூர்வ கதைகளும், அம்மணிபுரம் கொலைக்கேஸும் அவனறிந்தவனாதலால், அப்பிம்பங்களைப் பார்த்தவுடன், இவ்வுலக வாழ்வின் நிலையின்மையும், திடீரென்று மனிதருக்கு நேரிடும் கொடிய ஸம்பவங்களும், அவைகளால் அவர்கள் எண்ணியிருந்த எண்ணங்களெல்லாம் திடீரென்று தீயிற்பட்ட பனிபோல் சிதைந்து போவதும், அவனுள்ளத்தே தோன்றி அவன் மனத்தைக் கலக்கத் துவங்கின.

இந்நிலைமையில் நமது பரதேசியார் ப்ரத்யக்ஷமாகி, "மாதவ! என்னப்பனே! குழந்தாய்! மாதவ! ஆஹா! என்ன ஆச்சர்யம்! "நீ எவ்விடத்தினின்றும் உதித்தாயோ அவ்விடத்தையே நீ ஆச்ரயமடைந்தாய்! இவையெல்லாம் ஈசனுடைய அற்புதச் செயல்களல்லவா!" என்று மாதவனை ஆலிங்கனம் செய்து கண்ணீர் தாரை தாரையாய்ப் பொழிந்தார். முற்றத் துறந்த ஞானிபோல் நடிக்கும் நமது பரதேசி, தன் (மாதவன்) விஷயத்தில் இவ்வளவு அன்பு பாராட்டுவதையும், கேவலம் ஸாதாரண ஜனங்கள் போலக் கட்டியணை

த்துக் கண்ணீர் பெருக்குவதையும், முன்பின் அறியாத தன்னிடம் இவ்வளவு விசேஷ பக்ஷமுடையவரா யிருப்பதையும் கவனித்தும், அவனைப் பார்த்துச் சொன்ன சில வார்த்தைகளையும், அவைகளின் கருத்து இன்னவென்று அறியப்படாதாயினும் ஏதோ ரகஸ்யமான அர்த்தம் இருக்கவேண்டு மென்றும் நினைத்தும் மாதவன் பலவாறு ஆலோசிக்கலானான்.

இவைகளை எல்லாம் மாதவன் முகக் குறிகளால் கவனித்த நமது பரதேசியார், மாதவனை ஒருதடவை தட்டிக்கொடுத்து "அப்பனே! குழந்தாய்! நீ ஒன்றுக்கும கலங்கவேண்டாம்!. உலகமும் உலகத்தில் நடக்கும் விஷயங்களும் எல்லாம் மாயமாய்த் தோன்றும்" என்றார்.

மாதவன்:—"ஸ்வாமி! தாங்கள் சொல்லுவதொன்றும் எனக்கு விளங்கவில்லை. நான் யாதொரு வேதாந்தமும் படித்தவனல்லன்."

பரதேசி:—"அப்பா! வேதாந்தம் படிக்கத்தக்கதன்று. அறியத்தக்கதே. மேலும் நான் வேதாந்த (Philosophical) பரமாய் ஒன்றும் சொல்லவில்லை. எல்லாம் மாயம் (Mysterious) என்றுதான் சொன்னேன். எல்லாம் இம மண்ணுலகைப் பற்றியதே!"

மாதவன் :—இரண்டு மூன்று தடவை தன் கபோலங்களைக் கைவிரல்களால் அழுத்திக்கொண்டு, மறுபடி, "ஸ்வாமி! நான் சிறியவன். தாங்கள் சொல்லுவதின் தத்துவ அர்த்தம் என் புத்திக் கெட்டவில்லை. தாங்கள் யார்? ஏதோ அநாதையான என் விஷயத்தில் தாங்கள் இவ்வளவு அன்பு பாராட்டும்படி யவ்வளவு நான் பாக்யம் பெற்றது என்ன?—".

பரதேசி :—குழந்தாய்! நீ இப்பொழுது இம்மாயங்களெல்லாம் அறியவேண்டாம். நான் இன்னாரென்றும் உனக்குத் தெரியவேண்டாம. ஆனால், ஒரு சிறு கதை மாத்திரம் சொல்லுகிறேன். (என்று இவ்வாறு சொல்லிமாதவனை மெதுவாக அழைத்துக்கொண்டு அவ்வன நடுவில் உலாவிக்கொண்டு) "டில்லியில் அரசாண்ட சக்ரவர்த்திகளில் ஒருவருக்கு, இரண்டு புதல்வர்கள் அவர்களில் மூத்தவன் மிக்க புத்திமான். ஸகல நூல்களையும் கற்றவன். ஸத்தியஸந்தன்

நல்ல யோக்யன். அவன் அரசாளுவது அக்குடிகளின் பெரும் பாக்கியமென்றே சொல்லலாம். அப்படியிருக்கக் கபடனான இளைய புதல்வன் தன் தமயனை—"

என்று சொல்லு முன்னமே, நாம் முன் அத்தியாயத்திற் கூறியபடி மாலினியின் அழுகைக்குரல் கேட்கவே திடுக்கிட்டுத்திரும்பி, அவளைக் காப்பாற்றுவதற்காக இருவரும் விரைந்தோடினார்கள். மாலினி எவ்வாறு தப்புவிக்கப்பட்டாளென்றும், கடைசியாக மாதவன் ஸம்ரக்ஷணையின்பேரில் மாலினி அரண்மனைக்கு அழைத்துப் போகப்பட்டாளென்றும், முன் அத்தியாயத்தில் விவரித்திருக்கின்றோம்.

பால்யம் முதல் எவ்வளவோ நாளாய்ப் பழகி பரஸ்பரம் அன்பு விருத்தியடையப்பெற்ற இச்சிறுவர்கள் கேவலம் மனித எத்தனத்தால் சில நாட்களாய்ப் பிரிக்கப்பட்டும், அவ்வன்பு மேன்மேலும் அந்தரங்கமாகவே அதிகரித்து, மறுபடி கூடும்பொழுது இருவகைப்பட்ட (positive and negative currents) மின் ஸாரமும் திடீரென்று சேரும்பொழுது 'பளிச், பளிச்' என்று உதயமாகும் மின் ஒளிகள் போலவும், வெகுகாலமாய்க்காய்ந்து மழைபெய்து செழித்துத் திடீரென்று புஷ்பிக்கும் மலர்கள்போலவும் இவர்களுடைய அன்பு அனேகமான இன்பமொழிகளாயும், ஆலிங்கனங்களாகவும், முத்தங்களாகவும், இன்னும் பலவிதமான காதற்குறிகளாகவும் வெளிப்பட ஆரம்பித்தன.

மாதவன் மாலினியைத் தன் இடதுகையால் அணைத்துக் குதிரையின் வேகத்தால், அன்னவள் கீழே விழா வண்ணம் காத்துக் கொண்டு, தன் வலக்கையால் 'லகா'னைப்பிடித்து அதிவேகமாயும், சாமர்த்தியமாயும் ஸாரத்யம் செய்து, கூடிய சீக்கிரம் அரண்மனையின் பக்கத்து வாசலண்டைவந்து, குதிரையை நிறுத்தி மெதுவாக மாலினியைக் கீழே இறக்கிக் குதிரையை ஓட்டிவிட்டு, மாலினியை இறுகத்தழுவி முத்தமிட்டு, "கண்மணி! மாலினி! என் அன்பே! என் உயிரே! நாம் இருவரும் சேர்ந்துவாழத் தெய்வ ஸம்மதமில்லை போதும்! நீ எப்படியாவது ஸந்தோஷமாய் வாழக்கேட்பதே எனக்குப்பெருத்த ஸந்தோஷம்!" என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்தான்.

"மாலினி :—என் மாதவ! என்ன இவ்வாறு கூறுகின்றாய்? சூரியனிடத்திருந்து ஒளியையும், சந்திரனிடத்திருந்து குளிர்ச்சியையும், பாலிலிருந்து வெண்மையையும், மலரிலிருந்து மணத்தையும், உடலினின்று உயிரையும் பிரிந்து வேறாக வைக்க முடியுமோ? என் மாதவனிடத்திருந்து மாலினி பிரிந்து எவ்வாறு உயிர்த்திருப்பது?—"

மாதவன் :—"கண்மணி! நீ அவ்வாறு சொல்லலாகாது. நீ உயிருடன் இருந்து வாழ்ந்தால், உன் க்ஷேமஸமாசாரம் கேட்டாவது என் பால்ய ஞாபகங்களை நினைத்து ஒருவாறு ஸந்தோஷமடைவேன். என் உயிரே உருவெடுத்தாற்போல் விளங்கும் நீ உயிர் துறப்பதென்றால், இம்மாதவன் உயிர் எவ்வாறு தரிக்கும்? ஒருக்காலும்—"

இதற்குள் சிறிதுதூரத்தில் குதிரைக் காலடிச் சத்தங்களும் மனித அரவமும் கலந்து கலந்து கேட்டன.

மாதவன் :—(மாலினியை மறுபடி வாரியணைத்து முகத்தோடு முகம் பதித்து முத்தமிட்டு) "கண்மணி! என் மாலினி! எனக்கு விடைகொடு. நீ உள்ளே போ! யாராவது பார்க்க நேரிட்டால் நாம் இந்நிலைமையிலிருப்பதும் கெட்டுப்போம். அன்று எழுதியவன் அழித்தெழுதப் போகிறானோ? நடக்க நடக்கப் பார்ப்போம். தைரியமாயிரு" என்று சொல்லி மாலினியைத் துரிதப்படுத்தி அரண்மனைக்குள் அனுப்ப, அவ்விரு உடல்களும் பிரிந்து சென்றனவாயினும், ஊசியும் காந்தமும் போன்ற அவர்களுள்ளம் பிரிவாற்றாது வருந்தித் தவித்தன.

இதற்குள் தலைவர்களைத் துரத்திச் சென்ற நமது மணிபுரம் ஜமீன்தாரும் தினகரனும் அரண்மனை சேர்ந்ததும், மாலினி திரும்பி வந்து விட்டதையும், மாதவனுடைய பெருதவியால் அவள் தப்பித்து வந்தாளென்பதையும் அறிந்துகொண்டார்கள். தினகரனும், அவன் பிதா பாலூர் ஜமீன்தாரும் மாலினியின் அறையை நோக்கி விரைந்தோடினார்கள்.

நமது மணிபுரம் ஜமீன்தார் தனிமையாக ஆழ்ந்த ஆலோசனையில் மூழ்கலானார்: "எப்படியாவது, யார் செயலாலாவது மாலினி இவ்வளவாவது பாதகர்களின் கைவசப்பட்டு மானபங்கமடையாது

தப்பித்தது எல்லோருடைய பெரும் பாக்யமுமே. எனக்கும் ஓர் சந்தோஷந்தான். ஆனால் அவளைத் தப்புவிக்கும பாக்கியம் மாதவ னுக்கு நேர்ந்ததே! ஏற்கனவே என்மேல் மாலினிக்கு மெய்க்காதல் இல்லை யென்று தோன்றுகின்றது. அப்படி யிருக்க இவ்வளவு ஆடம்பரஞ்செய்தும் என்னால் தப்புவிக்கமுடியாமல் ஏகாங்கியான மாதவனால் தப்புவிககப்பட்டது, அவள் மனதில மாதவனுடைய பெருமையையும் என்னுடைய சிறுமையையும் எடுத்துக் காட்டுமே! மேலும் காதல் என்பது தானாகவே உதிக்கவேண்டுமேயல்லாது, மனிதன் செயலால் ஏற்படக்கூடியதன்று. தவிரவும் என்னபுத தியீனம்! மாலினி மனதைக் கொள்ளை கொள்ளும் மாதவன் இவ்வ ரண்மனையிலிருக்கும் வரை, அவள் எவ்வாறு அவனை மறக்கப்போ கிறாள்! அவன் இவ்வரண்மனைவிட்டு இதற்கு முன்னமேயே வெளி யேறி இருக்கவேண்டும்! அப்படிச்செய்யாதது நமது தவறு. ஆ னால்—ஆனால்—ஆனால்-ஆனாலென்ன?- ஆனால் நமது காரியம் வாத் யமாவதற்கு வேண்டிய முயற்சி நாம் செய்யாது சும்மா இருந்து விட்டுப் பிறகு நொந்து கொள்ளுவதில் பயனென்ன?'' என்று பல வாறு சிந்தித்துக்கொண் டிருக்கையில் அடைப்பக்கார

சோணை:—''மஹாராசா! யாரோ ஒரு பையன் இந்தக் கடுதாசியை மஹாராசாவிடம் கொடுக்கச சொல்லிட்டுப் போனான்'' என்று சொல்லிக்கொண்டு, ஒரு 'லகோடா'வை ஜமீந்தார் கையில் கொடுத்தான்.

ஜமீன்தார் ஆவலுடன் அதை வாங்கி யுடைத்துக்கொண்டே ''அந்தப்பையன் யார்? இங்கே அழைத்துவா!'' என்று ஆக்ஞாபிக்க,

சோமன்:—மஹாராசா! கொடுத்தானோ இல்லையோ பையன் விறுட்டுனிட்டு மஹாராசா வேட்டை நாக்குட்டிபோலே ஓட்ட மாய் ஓடிட்டான். மஹாராசா நாய்குட்டி அடிமைகூடக் கூட என்னடா, என்டு சந்தேகமாயே இருந்துச்சு'' என்று சொல்லி முடித்தான்.

• இதற்குள் ஜமீன்தார் 'லகோடா'வை உடைத்துப்பார்க்கவே, அதில் ஊர், பெயர், தேதி ஒன்றுமில்லாமல், எழுத்துக்களும் இயற் கையாய் எழுதப்படாமல் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது:—

"ஏ சமீன்தாரே! இருவது வரிசத்துக்கு முன் நடந்ததை நினைச்சிக்கிடு. இண்ணைக்கு நடந்தது அப்படியே போகட்டும். அப்படி இப்படி என்டு போலீசுக்கும் லீசுக்குச் சொல்லிக் கில்லிக்கொண்டு இருந்தியோ, அப்புறம் பார்த்துக்கோ! தெரிஞ்சதை பார்த்துக்கிடுதேன். உன் உயிர் என் கையிலே இருக்குது."

இதை வாசித்ததும் நமது ஜமீன்தாரின முகம் கறுத்து வாட்ட முற்றது. கடிதத்தை மடக்கிக்கொண்டு அப்படியே சோபாவில் சாய்ந்து கண்ணீர் பெருககிக் கொண்டு என்னென்னவோ யோசனையால் மூழ்கலானார்.

(இன்னும் வரும்)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.,

பஞ்சபூதம்.

(248-ம் பக்கத் தொடர்ச்சி.)

நீர்மட்டமானது சிறு அளவிற்கு மாத்திரம் ஒக்கும். அளவிறந்தபோது பயன்படாது.

இன்னும் பூமி உருண்டையா யிருக்கும்போது அதைச் சுற்றியிருககும் நீரும் பூமியும் சுற்றும்போது, அந்நீரானது அப்பூமி முழுவதும் பாய்ந்து கரை புரளாதிருத்தல் பொருந்துமோ?. ஒரு மழை பெருமழையாயின் நம் சிறு ஆறுகளில் உடைப்பு எடுத்து ஊர் முழுகிப்போவது பிரத்தியகூப் பிரமாணம். ஆனால், "ஆழாழி கரையின்றி நிற்க விலேயோ" என்றபடி ஈசனது சக்தியால கடல் நீர் ஓர் எல்லைக்குள் அடங்கியிருக்கக் காண்கிறோம். நிற்க

குளிரானது நீரைக் கல்லாக்கும். அனலானது அதை ஆவியாக்கும். கல்லான இடங்களில் தரையில் நடப்பதுபோல் கடலிலும் நடக்கலாம். நீராவியின் உதவியால் அல்லவா உலகத்தில் இயக்கப்

படும் யந்திரங்கள் பெரும்பாலும் தொழிற் படுகின்றன. அப்படிப் பட்ட நீரின் நன்மை அளவிடப்படா. நாயனாரும்

> "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
> துப்பாய தூஉ மழை"

என்றது அதுபற்றியன்றோ?

பிறகு அனல் என்பதைப்பார்ப்போம். அனல், கட்டையைக் கடைதலினாலும் (Friction) சில பாஷாணங்களினாலும் (Chemical Action) மின்சாரத்தினாலும் (Electricity) இவை போன்ற பிற காரணங்களாலும் தோன்றா நிற்கும்.

ஆகாயத்தினிடமாக, வாயுவும், வாயுவினிடம், அனலும், அனலினின்று, நீரும், நீரில் நிலமும் தோன்றும்.

இக்காலத்து மேல்நாட்டு சாஸ்திரிகள் மற்ற பூதங்களைப் போல் ஆகாயத்தையும் ஓர் பூதமாக அங்கீகரிக்காது போனாலும் அப்படிப்பட்ட ஓர் பூதம் இருக்கத்தான் வேண்டுமென்று துணிகின்றார்கள். கம்பியில்லாது தந்தி சமாசாரம் நிகழ்வதினாலும், அளவிடப்படாத தூரத்திலுள்ள நக்ஷத்திரங்கள் நம் கண்ணிற் படுதலாலும், இடையில் இந்நிகழ்ச்சிகளுக்கு காரணமாய் ஒரு பொருள் இருக்கவேண்டுமென்றும், கூறி அதுதான் ஆகாயம் (Ether) என்றும் கூறுவாராயினர்

ஒலி நிகழ்ச்சிக்கு வாயுவை ஆதாரமாக அவர்கள் சொல்லுவார்கள். நாமோ ஸ்பரிசத்திற்கு மாத்திரம் வாயுவென்றும், ஒலிக்கு ஆகாயமென்றும் கூறுவோம் இன்னும் சில நாட்களுக்குள் இம்மலைவும் அவர்கட்கு நீங்கும்.

நமது சாத்திரப்படி ஒலிக்கு ஆதாரமாகிய ஆகாயத்தினின்று வாயு உண்டாம். வாயுவினின்று தீயுண்டாம். இஃதுண்மை என்பது வாயுவில்லாதவிடத்தில தீப்பற்றாத காரணத்தால் விளங்கும். தீயினின்று நீர் உண்டாகும் என்பர் நம்மனோர். ஆயினும் மேற்கத்தியார், நீரானது ஜலவாயு பிராணவாயு இவற்றின் சேர்க்கையால் உண்டாகும் என்பர். "அவ்வித சேர்க்கை தானே அமையுமோ? மற்றெ

வ்வாற்றால்?" என்றால், தீயினாற்றான். "ஒண் கனல் சுட்டொன்று விக்கும்" என்று ஆதிகாலத்திலேயே நம் பெரியோர்கள் சொல்லி யிருக்கின்றார்கள். ஆதலால் தீ தான் நீருக்கு காரணமென்பது உண்மையாகும். நீரினின்று நிலம் தோன்றுவது சகஜம்

இப்படி ஐந்து விதமான பூதங்கள் ஓர் ஆகாயத்தை ஆதாரமாக வுடைத்துஎன்றால்"ஐந்தும் வெவ்வேறு தானா? ஒன்று தானா?" என்ற வினா நிகழும். ஐந்து பூதங்களும் உண்மையில் ஒன்றாயினும், அவைகள் நிற்கும் நிலை வேறுபாட்டால் வெவ்வேறென யாம் கொள்ளற் கிடம் தரும். அதுவன்றி வேறல்ல. எவ்வாறெனில், மண்ணாகிய பொன் முதலியவற்றை சல ரூபமாக உருக்கல் கூடும். சலமும் கல் ரூபமாக உறைதல் உண்டு. பூதக் கண்ணாடியினாலும் உண்டாகும் அனலின் செய்கை யாவற்றையும் பஸ்மீகரித்து சுத்தப்படுத்தும். அது கடவுளைப்போல்.நல்லவர்களுக்கு நல்லதாயும், கெட்டவர்களுக்கு கெட்டதாயும் இருக்கும். பாவபுண்ணியங்கள்போல் அறிந்து தொட்டாலும் அறியாது தொட்டாலும் சுட்டுவிடும். அஃதில்லையேல் இரவில் இருளே குடிகொளும். நீர், ஆவியாகாது. நீராவி யந்திரங்களினாலல்லவா மாடு குதிரை முதலிய பிராணிகளுக்கு ஹிம்சை குறைந்தது. மண் நீர் போல கீழ் நோக்குதலன்ன தீ மேனோக்கும். கீழ் நோக்க வேண்டில் ஓர் திரிச்சீலையின் புகையைச் சுடரில் படும்படி கீழே பிடித்தால் அச்சுடர் தன்னிலை பெயர்ந்து கையை நீட்டினாற் போல கீழே கிளைத்து இறங்கி அத் திரியைக் கொளுத்தும் இது எமதிறைவனது காருண்யகூற்றை நன்கு விளக்குகிறது. நாம் அவனை "நோகநிந் தழைத்துக் தழுக்க கண்டம் கனைய" புகை எழுப்புவோமாயின் "அழுதிடல்போதும். அணைத்திட வந்தேன்" என்று அவன் வரும் விதத்தைத் உருவகப் படுத்துதல் போலிருக்கிறது.

எட்னா (Etna) முதலிய இடங்களில் எரிமலைகள் உண்டாவதை நோக்குமிடத்து "அக்கடலின் மீது வடவனல் நிற்க வில்லையோ" என்பது சிந்திக்கற்பாலது.

(இன்னும் வரும்.)

C. S. முத்துசாமி ஐயர்,
Hd. Tamil Pandit, Wesleyan Mission High School, Negapatam.

நாட்டுக்கோட்டையாரும் தலைமயிர் வளர்த்தலும்.

நம்மவர் சிகை வைத்துக்கொள்ளாமைக்கு நமது சரித்திரம் சொல்வதாகக்கூறும் காரணம் சரியானதென்று தோன்றவில்லை. நம்மைப்போல தீக்ஷை பெற்றுக்கொள்கிற பிராமணர், சைவர் முதலியோர் சிகை வைத்துக்கொள்ளும்போது, நம்மவர் மட்டும் ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது! மேலும் தலைமயிரில்லாவிடில் மனிதனுக்கு அழகு குறைகிறதென்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கது. அழகை யார் வெறுக்கிறார்களோ அவர்களே தலைமயிரை யெடுத்துவிடுகிறார்கள். உதாரணமாக:—உலகப்பற்றற்ற துறவிகள முண்டனஞ் செய்துகொள்ளுகிறார்கள். இன்னும் சிலருக்கு அழகு குறையவேண்டுமென்றே அப்படிச் செய்யப்படுகிறது. ஆனதால் தலைமயிரில்லாவிடில் அழகு குறைகிறது என்பது வெளியாகிறது. குடும்பிகளான நாம் அழகு குன்றுவதை விரும்பமாட்டோம். ஆனால் வழக்கத்தை யெப்படி மாற்றுவது என்றஞ்சுகிறோம். ஞாயமான விஷயங்களில் மாற்றினாலென்ன? நமது ஆடையாபரணங்களெல்லாம் முன்னிருந்தபடி யிருக்கின்றனவா? இல்லையே. அவைகளைக் காலத்துக்கேற்றபடி அழகானவைகளாக மாற்றி வருகிறோமே! செயற்கையழகையே நாம் பெருக்கிக்கொண்டிருக்கும்போது இயற்கையழகைக் குறைக்கலாமா? நன்றாயோசித்துப் பாருங்கள்! நமது ஆகம சாஸ்திரப்படி சிகை வைத்துக்கொள்வது அவசியமாகிறது. சரீரத்தில் பிரதானமான சிரசை சிகை பாதுகாப்பது யுக்திக்குப் பொருத்தமாகிறது. நமது முன்னோர்கள் முடி வைத்திருந்ததாகவே கேள்விப்படுகிறோம். இப்போதும் சுவாமியாடிகள் முடிவைத்திருக்கிறார்கள். ஆகவே சுருதி, யுக்தி, அனுபவம், மூன்றுக்கும் இவ்விஷயம் கிரமப் பொருத்தமாகிறது. எவ்வழியாகவோ இவ்வழக்கம் மெல்லமெல்ல நம்முட் புகுந்து நிலைத்துக்கொண்டது. எம் நண்பரொருவர் "தலை மயிரில்லாவிடிற் சரீரத்துக்குப் பலமுண்டாகுமோ?" வென்று சந்தேகப்பட்டார். உடனே ஒரு பெரிய 'டாக்டரி'டம் போய் அதைப்பற்றி நெடுநேரம் பேசியதில் அவர் தலைமயிர் இல்லாவிடிற் பல தீமைகளுண்டாகின்றன வென்று தக்க காரணங்களோடு சொன்னார். நம்முட் கற்றவர்கள் சிகை வைத்துக்கொள்ளலாமென்பதை யொப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் தாங்கள் நடந்துகாட்ட அஞ்சுகிறார்கள். படித்தவர்கள் பயந்தால் மற்றவர்களைப்பற்றிப் பேசவேண்டுமா? இவ்வழக்கம் நம்முள் இல்லாமையால் மேனாட்டு முறையை யனுசரித்துத் தற்காலத்தில் நமது சிறார்கள் தலைமயிர் வைத்துக்கொள்கிறார்கள். இவ்விஷயத்தை இப்போதே கவனித்துச் சிகை வைத்துக்கொள்கிற ஏற்பாட்டை யனுட்டிக்காவிடில், சிறிதுகாலத்துள் மேனாட்டு முறையே நம்முள் வழக்கமாகி நிலைத்துவிடும். அப்போது அது சாஸ்திர விரோதமென்று வாதாட நேரும். ஆகவே படித்தவர்களும், செல்வர்களும் இதை முதலில் ஆலோசித்துத் தக்கபடி நடந்து காட்டுவார்களாக.

மு. சின்னையா செட்டி, (மகிபாலன்பட்டி)

மூத்ரா ராக்ஷஸம்.

(250-ம் பக்கத் தொடர்ச்சி.)

——:[:(:o:):]:——

இங்கிலேமையில், நமது பக்கத்தில் யாதொரு விதமான முயற்சிக் குறைவும் இல்லை. ஆனால் இந்த விருஷ்லன் தனது ராஜ்ய நிர்வாகங்களை என்போன்ற மந்திரிகளிடம் ஒப்புவித்துவிட்டு அலக்ஷ்யமாயிருக்கின்றான். வாஸ்தவந்தான், ராஜாங்கமானது, அதன் நிர்வாஹ பாரம் தன்னைப்பொறுக்காதவரை சுகமானதுதானே! எப்படியென்றால்,

தாங்களே பாடுபட்டு உண்ணவேண்டியவர்களும் யானைகளையடக்கி ஆள்பவர்களும், அரசர்களும், எவ்வளவு பலவான்களாயிருந்தாலும், அநேகமாய் சமயங்களில் மனந்தளர்ந்து வருந்துகின்றனர்()

(பிரவேசம்: யம படத்துடன் ஓர் சாரணன்:)

சாரணன்:—(பாடுகிறான்.)

"யமனை வந்தனம்! நமனை வந்தனம்!
யமனைகாட்டிலும் பெரிய தெய்வம்
இவ்வுலகில் வேறுண்டோ? (யமனே)
யமனையல்லாள் வேறுதெய்வம் எவராகிலும் கும்பிட்டால்
யமன்வந்தவரை இழுத்திடுவான் வதைக்கவதைக்க ஜீவனை" (யம)

ஹா! ஹா! ஹா! ஹா! ஒருவனுக்குப் பகதி மாத்திரம் இருந்துவிட்டால் அவ்வளவு கொடிய யமனிடத்திலிருந்துகூடப் பிழைப்பு நடத்திக்கொள்ளலாம். எமன் எல்லோரையும் கொல்லுதான். அவனை யண்டி நமக்குப் பிழைப்பு நடக்குது ஹா! ஹா!! ஹா!!! ஹா! ஹா!! ஹா!!!

இந்த வீட்டுக்குள் நுழைந்து, யமபடத்தைக் காட்டிப் பாட்டுப் பாடுகிறேன். (நடக்கிறான்.)

சிஷ்யன்:—(பார்த்துவிட்டு) "யாரப்பா! நீ இங்குவரக்கூடாது."

சாரணன:—"ஓய்! ப்ராஹ்மணரே! இது யாருடைய வீடு?"

சிஷ்யன்;—"இது நமது குருச்ரேஷ்டரும் பூஜ்யருமான சாணக்யருடைய க்ருஹம்."

சாரணன்:—(சிரித்துவிட்டு) "ஓய் ப்ராஹ்மணரே! அப்படிச் சொல்லும்! பலே!. என்னுடைய சொந்த—என்னோடுகூடத் தர்ம உபதேசம் பெற்ற—என்னுடைய சகோதரர் வீடா இது? ஆகையால் வழிவிடும். உள்ளே சென்று உம்முடைய குருவிடம் இந்த பமபடத்தை விரித்துக்காட்டித தர்மத்தைப்பற்றி உபதேசிக்கிறேன்."

சிஷ்யன்:— கோபத்துடன்) "அடே! மூர்க்க! நீ என்து உபாத்யாயனிரச் காட்டிலும் தர்மசாஸ்திரங்களில் நிபுணனா?"

சாரணன்:—"ஓய் ப்ராஹ்மணரே! என்மீதுகோபியாதேயுங்கள். 'எல்லாமறிந்தவ ரிவ்வுலகிலில்லை' என்று கேள்விப்பட்டதில்லையா? உம்முடைய உபாத்யாயருக்குச் சில தெரிந்திருக்கலாம். என்போன்றவர்களும் வேறு சில அறிந்திருக்கலாம்"

சிஷ்யன்:— "அடே! மூடா! என் உபாத்யாயருடைய ஸர்வக்ஞத்துவத்தை நீ மறுக்கின்றாயா?"

"சாரணன்:—ஓய்! ப்ராஹ்மணரே! நீர் சொல்லுகிறபடி உம்முடைய உபாத்தியாயர், எல்லாம் அறிந்தவர் என்றே வைத்துக்கொள்வோம். அப்படியானால் *"சந்த்ரனிடத்தில் பிரியமில்லாதவர் யார்?" என்று அவருக்குத் தெரியுமா?"

சிஷ்யன்:—"அடே! மூடா! அது தெரிந்தென்ன? தெரியாததாலென்ன?"

சாரணன்:—"ஆ! அது தெரிவதால் உண்டாகும் பயன் உம்முடைய உபாத்யாயருக்குத்தான் தெரியும். உமக்கு இவ்வளவுதான் தெரியும்—சந்த்ரனைக் கண்டால் தாமரைக்குப் பிடிக்காது என்று மாத்திரம்—இதைக்கவனியும்!"

தாமரை மலா எவ்வளவோ அழகாய் இருந்தாலும். அதன் அழகுக்கும், குணத்துக்கும் எவ்வளவு வித்யாஸமிருக்கிறது. சந்த்ரன் பூர்ணமண்டலத்துடன் பிரகாசிப்பது தாமரை மலர்களுக்கு ஸகிக்கவில்லை விரோதமாயிருக்கின்றது) (19)

(இன்னும் வரும்.)

R. வேஙகடநாராயண சர்மா B. A. B. L.

குறிப்பு:—* சந்த்ரன்=சந்த்ரகுப்தன்.

காலம் சென்ற ஆனரபிள்

ஸ்ரீமத் M. வெங்கட்டராமையர் அவர்கள்.

---

*திருமதுரை மாநகரில் உயர்குலமுபோல் உயர்குணமும் சிறப்பவாய்ந்த
சருமகுண மாமணிஎம் வெங்கட்ட ராமனெனும் தயாளவள்ளால்!
பெருமைபெறு உயர்தரக்கோர்ட் வக்கீலாய 'கவர்ன்மேன்டு பிளீடர்'ாகி
உரிமையுறு புகழ்மேவி இருபததி ராண்டுனைப்போல் உற்றூர்யாரே? (1)

ஆங்கிலத்தில்'மதுரைமெயில்'எனும்பெயர்கொள் பத்திரிகைக் கதிபனாகிப்
பாங்குபெற நமமவர்க்கு வேண்டுவன ஒவ்வொன்றும் பண்பாக்கூறி [மை
வீதகுபெரும் புகழ்படைத்த துரைத்தனத்தாரஉவப்புடன்பல்விதத்தும்நன
ஈங்கிசையத் தூண்டுவித்தாய்! பிறர்க்குதவி தினைபோல எவர்செய்தாரே?

வட்டிமிகப் பெறவிரும்பிக் கைப்பொருளும் தொலைப்பவர்கள்மலிஇக்காலத்
தெட்டுணையும் கெடுதலின்றி வளர்மதிபோல் பொருள்வளர்தற் கேற்றதாகச்
சட்டமுறைப் படி'இந்து சாசுவத நிதி'யுநன்கு தாபித்தோன்நீ
இட்டமுடன நீபுரிந்த பெருஞ்செயல்கள் முழுதும்எடுத திசைப்பார்யாரே?

"மதுரைமகா ஜனசபை"யின்உபாக்ராசனாதிபத்யம் வகித்தோன்நீயே [நீயே
பொதுநலஞ்சேர்"இந்தியன்பாங்க்"மந்த்ராலோசனைசபையிற்பொலிந்தோன்
ததிபெறுவிக் டோரியா-எட் வர்டநாப கச்சங்க'த்தோழிலோனநீயே.
கதிசருதேச் வஸ்தான கமிட்டிஜில்லா போர்டுகளிற் கலந்தோன் நீயே. (4)

இவைகளினால எத்தனையோ நலம்புரிந்தாய. இம்மட்டோ? எவர்க்கானும்
அவசியமாம ஆங்கிலகா லேஜ்ஒன்றும் மதுரையிலேயமைப்பான்வேண்டித்
தவமவியும பொருள்கொடுத்தும கொடுப்பித்தும்அதன்காரிய தரிசிஆனாய!
அவனியிலே பொதுநன்மைக காகநின்போல் பாடுபட்டார் யாரே ஐயா? (5)

சென்னைநகர் வே. கிருஷ்ணசாமி வள்ளல் வடமொழியின் சிறப்பை நோக்கி
மன்னுகலா சாலைநன்கு வைத்ததுபோல் நீயுமிந்த மதுரையூரில்
மின்னுவட மொழிவேத பாடசா லையைஉளத்து விருப்பாலாக்கி
அன்னதற்கு நிதிபதினா யாயிரந்தந் தனைநினைநேர் ஆவார்யாரே?. (6)

---

* இவை வணிகருல திலகரும் பொதுநலப் பிரியருமான கானாடுகாத்தான் ஸ்ரீமான் S.R.M.M.A. அண்ணாமலை செட்டியாரவர்கள் மதுரைக் காலேஜ் ஹாலில வைக்கப்பெற்ற ஸ்ரீமத் எம். வெங்கட்டராமையரவர்களின் உருவப்படத்தை, 16-10-11ல் கூடிய பெருங்கூட்டத்தில் அக்ராஸனம் வகித்துத் திறந்த காலையில் கூறப்பெற்றவை.

இம்மதுரைக் காலேஜூ முதல்தரமாம் படிபுரிதற் கெண்ணம் கொண்டாய்
அம்ம! அதை முடிக்குமுனம் இவ்வுலகை விட்டகன்றாய். அந்தோ! அந்தோ!
எம்மனிதர் உளமிரங்கார்? எவர்விழியே நீர்வடியா திருக்கும்? எனதும்
எம்மருமை வேங்கட்ட ராமவள்ளால்! நீபிரிந்ததென்னே! என்னே! (7)

மிக்ககலம் பிறர்க்கியற்றச சட்டநிரு பணசபையில் மேவவேண்டித்
தக்கபொருள் தனைத்தருவதும் கவர்ன்மெண்ட்வங்கில்வேலைதனையுநீத்தாய்.
இக்கலியிற் பிறர்க்காகத் தனவருவா யையுமவெறுப்பார் எவரேஉள்ளார்?
தொக்ககலா மதிநீயே. வேங்கட்ட ராமனெனும் சுகுணவானே!. (8)

கருணைமலி கவர்னர்முத லோர்மகிழச் சட்டசபை கலந்தங்கேசேர்
தருணம்அர சாங்கத்தார் உலகத்தார் மனமிரங்கித் தவிக்குமாறு [வாரா
உரிமைபெறுவிண்புகுந்தாய்! இதுதகுமோ? இதுமுறையோ? உன்னைப்போல்
ஒருவர்வரக் கண்டிலமே! நினைக்காணும் நாளும்மைக் குண்டோ ஐயா!. (9)

எம்மையெலாம் நீபிரியாய. யாமுமுனைப் பிரியகிலேம். இடையிலேழும்
அம்ம!பிரித் ததுஎனினும், நின்புகழும் எமதன்பும் அழுத்தவாலே,
இம்மையில்யாம் பிரியாமைக் கறிகுறியாய் நின்உருவை இலங்கத்தீட்டிச்
செம்மைபெறு காலேஜில் சேர்த்துமகிழ் கின்றனம்நின் சீர்த்திவாழி. (10)

முன்னைநீ தாங்கினவா றுனைத்தாங்கு காலேஜூ முழுதும்வாழி!
உன்னருமைப் புதல்வன்முத்து ராமலிங்க வேள்முதலோர் ஒருங்குவாழி!
நன்னருளைப் போல்காலேஜ் நலம்பெறச்செய் மாதுவைய நாமன்வாழி!
மன்னிய வெங்கோபா சாரியாதி ஆசிரியர் வாழிவாழி!. (11)

நகரத்தா ரெல்லாரும் எமதுகுல திலகமென நண்ணிநாளும்
பகரத்தான் அவதரித்தான் காநாடு காத்தானும் பதியின்மேலோன்
ஒகரத்தார் செட்டியவைநேர் பெற்ற அண்ணாமலைநாமன் உவப்பால் ஈங்கே
சிகரத்தார் தீபமென இச்சபைநா யகமானான் சிறக்கவாழி! (12)

ம. கோபாலகிருஷ்ணையர்.

ஸர் ஐஸக் நியூடன்.

இவர் 1642ஆம் டிசம்பர் மீ 25உ இங்கிலாந்து தேசத்தில் கிராந்தம் என்னும் பட்டினத்துக் கடுத்த ஊல்ஸ்தோர்ப் என்னும் கிராமத்தில் பிறந்தவர். இளமையில் அதி நுட்பமான தேகமுடையாரா யிருந்ததினால் இவர் வெகுநாள் ஜீவித்திருப்பர் என்ற நம்பிக்கை எவர்க்குமே இல்லாதிருந்தது. இவர் தம் தாய் வயிற்றிலிருக்கும் பொழுதே தந்தையை இழந்தனர். புருஷன் இறந்த இரண்டு வருஷங்களுக்கெல்லாம் இவரது தாய் மறுமணம் முடித்தனள். இக்கல்யாணத்தால் இவர்க்கு ஒரு சகோதரரும் இரண்டு சகோதரிகளும் தோன்றினர். நிற்க.

நியூடனுக்கு 12 வயதாகும்வரை அவரது கிராமத்திற்கடுத்த கிராமத்திலிருந்த ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்திற் பயிலுமாறு அவரை அனுப்பிவந்தார்கள். பிறகு அவர் கிராந்தம் நகரத்து இலக்கண பாடசாலையிற் சேர்க்கப்பட்டனர். ஆரம்பத்தில் அவர் படிப்பில் அதிக கவனம் செலுத்தாது வகுப்பில் கடைசிப்பையனாக இருந்ததால் அவர் முழு மூடனென்றே யாவரும் அக்காலத்தில் எண்ணியிருந்தார்கள். அவர் பிரயாசைப்பட்டு செவ்வையாய்ப் பாடங்களைப்படித்து வகுப்பில் முதலைப்பையனாகி நின்றதற்குக் காரணம் பின்வருமாறு சொல்லிக்கொள்ளப் படுகிறது. அவர் பாடம் ஒப்பிக்காமற் போனதுபற்றி அகங்காரியான ஒருபையன் அவரை உதைத்து முந்தவே, அவருக்கு ரோஷமபிறந்து அப்பேர்ப்பட்ட பையனைத் தான் முந்த வேண்டுமென்று ஆத்திரங்கொண்டு படித்து முந்தினாராம். முந்தியும்,

"கூர்த்தநாய் கௌவிக் கொளக்கண்டு தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை."

என்பதற்கிசைய தன்னை சிக்ஷித்த பையனைத் திரும்ப சிக்ஷிக்காமல்

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்."

என்றபடி, அவனிடம் பக்ஷமே பாராட்டி அவனை நல்வழிப் படுத்தினர். இதனால் நியூடன் தம் வகுப்பிற் பயிலும் எல்லா மாணவர்களுடைய நன்கு மதிப்பையும் பெற்றனர்.

நீறு பூத்த நெருப்புப் போன்றிருந்த இவர், அரை நாழிகையேனும் வீண்பொழுது போக்காமல் நூதனக் காற்றாடிகள் செய்து பிள்ளைகளுக்குக் கொடுத்துக் கொண்டும், வாள், சம்மட்டி, கோடரி, முதலியவற்றின் உதவியால் சிறு யந்திரங்கள், வண்டிகள் முதலியனவும், கடிதத்தால் லாந்தல் கூடு முதலியனவும் செய்தும், கவிக

ள்கட்டியும் சித்திரபடங்கள் வரைந்தும், தமது காலத்தைப் போக்குவார். கணிதசாஸ்திரத்தில் இவர்க்குப் பித்து அதிகம். ஒழிந்தவேளைகளில் எல்லாம கடினமான கணக்குகளுக்கு வழிகண்டு பிடித்துக்கொண்டும, பலவித யந்திரங்கள் வரைந்துகொண்டும்இருப்பார். இவருடைய வீட்டுச் சுவரில்கூட எங்குபார்த்தாலும் கணித விஷயங்களே எழுதப்பட்டிருக்குமாம.

இவருடைய 15வது வயதில் இவர் தமது இரண்டாவது தந்தையையும், இழக்கவே, இவர் தாய் இவரது படிப்பை நிறுத்தித் தனக்குத் துணையாக வியவசாயத்தொழில பார்க்குமாறு இவரை கிராமத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டாள். பயிர்த்தொழிலில் அவர் புத்தி செல்லவே இல்லை. புலங்காக்க அவர் அனுப்பப் பட்டபோதிலும,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்"

என்றபடி அவரது முழுக்கவனமும படிப்பிலும், யோசனையிலும் இருக்கும் ஆடுகள் எங்கேனும் காணவிடத்திற ஓடிவிட்டாலும மாடுகள பயிரையும நெல்லையும மேய்ந்து தின்றாலும இவர்க்குத் தெரியவே தெரியாது.

பொருள்களை வாங்குவதிலேயும், விற்பதிலேயும, அவரைப பழக்கும் பொருட்டு சிறுவனை அவர் தாய் நம்பிக்கையான ஓர் வேலைக்காரனுடன் சேர்த்து கிராமத்தின் நகரத்துக் கடைக்கு அடிக்கடி அனுப்புவதுண்டு. சந்தைக்குப் போகவும, அவர்க்குப்பிரியம் இராது. அவர் வேலைக்காரனையே அவ்வேலைகளை யெல்லாம பார்க்கச்சொல்லிவிட்டு எங்கேயேனும் ஓர் அமைதியான இடத்தில உட்கார்ந்துகொண்டு விஷய பரிசீலனம செய்துகொண்டே இருந்து வேலைக்காரன் அங்கு திரும்பியவுடன் அவனுடன் சேர்ந்து வீடு திரும்புவர்.

ஒருநாள் அவர் ஓர் வேலி ஓரத்தில்அவர் புத்தகமும் கையுமாய் உட்கார்ந்து ஆழ்ந்த யோசனையிலிருந்து ஓர் அரிய கணக்குக்கு வழி கண்டுபிடித்துக் கொண்டிருந்ததை மறைந்திருந்து கண்ட அவரது சிறிய தகப்பனாரும வேறுசில உறவினரும அவர்க்கு யந்திர கணிதசாஸ்திரங்களில இருந்த மதிநுட்பத்தை வியந்து அவரை மறுபடியும் பள்ளிக்கூடத்திற்கே அனுப்புமபடி அவருடைய தாய்க்குச் சிபார்சு செய்தார்.

(இன்னும் வரும்)

S. நாராயணன் B. A. L. T.
Mathematics Lecturer, Madura College.

சமாசாரக்கொத்து.

முடிசூட்டுக் கொண்டாட்டமும் இரங்கோனும்:—12—12—11ல் நமது மாட்சிமைதங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தி மஹாராஜா அவர்கள் மகுடாபிஷேகக் கொண்டாட்டமானது இரங்கோன் நகரில் பல இடங்களிலும் நடந்தது. இவற்றிற்கெல்லாம் கிரீடம்போலச் சிறந்து விளங்கியது ராயபகதூர் ஸ்ரீமாந். பெ. மா. மதுரைப்பிள்ளையவர்களால் தமது கலாசாலையில் கூட்டப்பட்ட பெருஞ்சபையே. இப்பிரபு அவர்கள் இரங்கோனில் பிரசித்திபெற்ற பெருஞ்செல்வமும் புகழும் உதாரமும் ராஜவிசுவாசமும், இரக்கமும் செல்வாக்கும் இன்னும் எல்லா உயர்குணங்களும் பெற்ற சீமான். இவர்களால் நடைபெறும் கல்விச்சாலை பலவகைப் புஷ்பங்களாலும், செடிகொடிகளாலும், தேவேந்திர சபாமண்டபம்போல் அலங்கரிக்கப் பெற்றது. குறித்தகாலத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் கூடினார்கள். ஸ்ரீமாந் பிள்ளையவர்களும் சபையாரும் விரும்பிய வண்ணம் தமிழ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமத் ஞானவீரன் பி. ஏ. அவர்கள் அக்கிராசனம் வகித்து நமது சக்கரவர்த்தி அவர்களின் அளுகைத் திறத்தையும், ஆங்கில அரசாட்சியால் நாம் அடைந்துள்ள நன்மைகளைப்பற்றியும் விரிவாக ஆங்கிலத்தில பேசினார்கள். மிஸ்டர் பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் பி. ஏ. தமிழில் அதை மொழிபெயர்த்துரைத்தார்கள். மிஸ்டர் அருணகிரி முதலியார் அவர்கள் நமது சக்கரவர்த்தியவர்கள் கருணை மாட்சியையும், பெருமையையும் விளக்கிப் பேசினார்கள். ஸ்ரீமாந் ராயபகதூர் பிள்ளையவர்கள் தங்கள் கலாசாலை மாணாக்கர்கட்கு காருண்ய கவர்ன்மெண்டார் அனுப்பிய மெடல்களும், யோக்கியதா பத்திரங்களும் கொடுத்தார்கள். இரங்கோன் வித்வாபிமானி சங்கத்தாரியற்றிய முடிசூட்டு வாழ்த்துப் பாடல்கள் அரங்கேற்றப்பெற்றன. இங்ஙனம் ராஜவிசுவாசம் பாராட்டிய ஸ்ரீமாந் ராயபகதூர் மதுரைப்பிள்ளையவர்களின் பெருமையைப் புகழ்ந்து அவர்கட்கு பூமாலைசூட்டப்பெற்றது. சபையோர் யாவர்க்கும் புஷ்பம் சந்தனம், தாம்பூலம், பழவகை முதலியன வழங்கினார்கள். முடிவில் அக்கிராசனரவர்கட்கு வந்தனமளித்து மாட்சிதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தி மஹாராஜா அவர்களும் மேரிமகாராணி அம்மையவர்களும் எல்லாச் செல்வமுற்று பல்லாண்டுவாழ்ந்து செங்கோல் செலுத்தும்படி கடவுளைப் பிரார்த்தித்தார்கள். இவ்விதம் எல்லாச்சபைகளிலும் இதுவே மேலானதென்று யாவருங் கொண்டாடும்படி ஸ்ரீமாந் பிள்ளையவர்கள் நடத்தினார்கள். இவர்கள் நீடுவாழ்க.

லிஸ்பனிலிருந்து டப்ளினுக்குப் போய்க்கொண்டிருந்த ஹெலெடன் என்னும் பிரிட்டிஷ் கப்பல் சென்ற மாதம் 21உ பிஸ்கே குடாக் கடலில் முழுகிவிட்டது, இரண்டு மாலுமிகள் தவிர மற்றவர்களெல்லோரும் சமுத்திரத்தில் ஆழ்ந்துவிட்டார்கள்

திருவல்லிக்கேணிப் பிரபல ஹைகோர்ட் வக்கீலாயிருந்து காலஞ்சென்ற ராஜா ராமராவின் பௌத்திரி 19 வயதுள்ள ருக்மணி அம்மாளை டாக்டர் ஏ. லக்ஷ்மிபதி என்பவர் விவாஹம் செய்துகொண்டாரென்று அறிந்து சந்தோஷப்படுகிறோம். டாக்டர் லக்ஷ்மிபதி வைத்தியத்தில் நல்லபெயர் வாங்கியிருக்கிறவர். ஹிந்து விவாகத்திருத்த சபையின் செக்ரிடரிகளில் ஒருவர். தெலுங்குபாஷையில் ஸாமர்த்தியமுள்ளவராய் அதன் அபிவிருத்திக்காகபாடு படுகிறார். ருக்மணி

அம்மாள் மதர்ர்ஸ் பிரஸிடென்ஸி காலேஜில் ஜூனியர் இன்டர் மிடியேட் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாள்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்:—இதன் காரிய தரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாசையங்காரவர்களின் நன்முயற்சியினால் சுமார் 80 பேர்கள் உள்ளூரிலேயே "செந்தமிழ்"ச் சந்தாதார்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். அன்றியும் வயதிற் சிறியராயினும் அறிவிற் பெரியரும், ராஜ பக்த தேசபக்த சிகாமணியுமான கானாடுகாத்தான் ஸ்ரீமான் M. C T. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் சமீபத்தில் ஷை சங்கத்திற்கு விஜயம் செய்து "சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை"ச் செலவைத் தாம் கொடுத்துவிடுவதாய் ஒப்புககொண்டுவிட்டனர். இவர் வந்தவுடன் சங்கத்தார்கள் இவருடன் ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரவர்களின் அகால மரணத்துக்காக விசனித்து,

"மொய்ச்சங்கம் தாங்கும் முகில்போல் திருவுளசீ
இச்சங்கம் தாங்கென்று இசைத்ததே—மெச்செங்கோன்
பெத்தாச்சி போற்சங்கப் பிள்ளையைநன் காதரிப்பான்
பெத்தாச்சி என்றுரைத்த பேச்சு"

என்று, "சங்கமபெற்ற ஆய்ச்சி நீயே" என ஸ்ரீமான் தேவர் சொன்னதை நினைப்பூட்டிப் புகழ்ந்தனர். சென்ற வருஷோத்ஸவ சமயத்தில் சங்கம் பொருள் வருவாயின்றித் தவித்துக்கொண்டிருந்தகாலை ஸ்ரீமான் செட்டியாரவர்கள் 1000 ரூபாய் நனகொடை தந்து மாதாமாதம் 50 ரூபா தருவதாக ஒப்புக்கொண்டதும்,

"சீலத்தாற் கல்வியிறைற் செய்தொழிலாற் செல்வாக்காற் சிறப்புற் றோங்கும், காலத்தார் புகழ்வணிக குலதிலகன் பெத்தாச்சி தனதன் மாரி, போலத்தான் எபூர்த்தீதமிழ்ச சங்கமெனும் பயிர் தழையப் பொருள் பொழிந்தான், காலத்தாற் செய்நன்றி ஞாலத்திற் பெரிதன்றோ கலைவல் லீரே."

என்று ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் தமிழ்ச் சங்கப் பிரதிநிதியாக இதைப் பாராட்டிக் கூறியதும் தமிழபிமானிகளின் ஞாபகத்திலிருக்கலாம். நிற்க.

இவரைத்தவிர, சைவ செந்தமி ழபிமான சீலரும், பொது நன்மையிற் கண்ணும கருத்தும் அபிமானமு முடையோருமான தேவிகோட்டை ஸ்ரீமான் மெ. அரு. நா இராமநாதன் செட்டியாரவர்கள், மாதாமாதம் 50 ரூபாய் தருவதாகவும, சென்னைப் பிரபல ஹைகோர்ட்வக்கீல் ஸ்ரீ S ஸ்ரீநிவாசையங்கார்ரவர்களும், இராமநாதபுரம் சின்ன மஹாராஜாவாகிய ஸ்ரீ ராஜா M. தினகர் பகதூர அவாகளும் ரூபாய் 100 தந்து சங்கத்தின் நிரந்தர அங்கத்தினர்களாகயிருக்கவும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். இவர்கள் தெள்ளறிவு சுகவாழ்வு நீண்ட ஆயுள் முதலியன பெற் றோங்குவார்களாக. பத்திராதியர்.